காால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும்
மீன்வளத்துறை

# மீன்வளம்

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2016-2017

**கோரிக்கை எண். 7**

**D.**ஜெயக்குமார்
மீன்வளத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
**2016**

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | மீன்வளக் கொள்கைகளும் மற்றும் அதன் தொலைநோக்கு பார்வையும் | 6 |
| 3 | கடந்த ஐந்தாண்டுகளில் எய்தப்பட்ட சாதனைகள் (2011–12 முதல் 2015–16 வரை) | 8 |
| 4 | தமிழகத்தின் மீன்வளம் – ஒரு கண்ணோட்டம் | 14 |
| 5 | நிர்வாக அமைப்பு | 21 |
| 6 | தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல் | 24 |
| 7 | கடல் மீன்வளம் | 32 |
| 8 | உள்நாட்டு மீன்வளம் | 82 |
| 9 | விரிவாக்கம் மற்றும் பயிற்சி | 89 |
| 10 | சிறப்புத் திட்டங்கள் | 91 |
| 11 | மீனவ கூட்டுறவு சங்கங்கள் | 99 |
| 12 | தமிழ்நாடு மீனவர் நல வாரியம் | 100 |
| 13 | தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) (TAFCOFED) | 103 |
| 14 | தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் (வரையறுக்கப்பட்டது) (TNFDC) | 112 |
| 15. | தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் | 119 |
| 16. | 2016–17 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு | 136 |
| 17. | நிறைவுரை | 136 |

## மீன்வளத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2016-2017

***“ மீன்வளத்துறையினை நவீனப்படுத்துவதற்கும், கடல் பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக ஆக்கிடவும், எனது தலைமையிலான அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.”***

– *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்*

### 1. முன்னுரை

நமது மீனவர்களின் நலன் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியினை உள்ளடக்கிய மீன்வள மேம்பாட்டிற்கு தமிழ்நாடு அரசு, அதிமுக்கியத்துவம் அளித்து வருகிறது. அதற்கான இயக்கத்தினை, தொடர்ந்து பல்வகையிலும் செயல்படுத்த ஏதுவாக இந்த அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் மீன்வள மேம்பாட்டிற்கு உத்வேகம் அளித்திட ஏதுவாக 2010-11 ஆம் ஆண்டில் ரூ.193.33 கோடியாக ஒதுக்கப்பட்ட நிதியினை 2016-17ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு ரூ.743.79 கோடியாக பன்மடங்கு உயர்த்தி ஒதுக்கீடு செய்துள்ளது.

மீன்வளத்தில் முழுமையான ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு வலுவான அடித்தளத்தினைஅமைத்திட கொள்கைகள் வகுத்து, அதனடிப்படையில் மீன் உற்பத்தியை அதிகரித்தல், மீன்வளத்தைப்

பாதுகாத்தல், நீடித்த வளங்குன்றா மீன்பிடிப்பினை உறுதி செய்தல் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளை மேம்படுத்துதல், மீன்பிடிக் கலன்களை பாதுகாப்பாக நிறுத்திட மீன்பிடி துறைமுகங்கள்/ மீன் இறங்கு தளங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சுகாதாரமான முறையில் மீன்களை கரையிறக்கி கையாள கடற்கரை சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை அளித்தல், உள்நாட்டு மீன் விற்பனை வசதிகளை வலுப்படுத்துதல், மீன்வளப்பிரிவில் மனிதவள மேம்பாட்டை வலுப்படுத்துதல், மக்களுக்கு புரதம் நிறைந்த சுகாதாரமான மீன் உணவினை அளித்தல் மற்றும் மீனவர்களின் நலன்களையும் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துதல் போன்ற பல்வேறு புதுமையான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த அரசின் புதிய முயற்சியான மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் ஒவ்வொரு கடல் மீனவ குடும்பங்களுக்கும் நிவாரணத் தொகையாக ரூ.4,000/–ம் மற்றும் மீன்பிடி தடைக்காலங்களில் நிவாரணத் தொகையாக ரூ.2,000/–ம் வழங்கியது, நமது மீனவர்கள் எதிர்நோக்கிய சிரமங்களுக்கு துயர்துடைக்கும் நிவாரணமாக அமைந்தது. 2014-15ஆம் ஆண்டில், மீனவர்கள் மற்றும் மீனவ மகளிருக்கு, தேசிய கடல் மீனவர் / மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு வந்த ரூ.1,800/-, ரூ.2,700/-ஆக உயர்த்தப்பட்டது. மேற்காணும்

திட்டங்களின் மூலம் கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.749.60 கோடி நிவாரணத்தொகை கடல் மீனவ / மீனவமகளிரின் சேமிப்பு வங்கி கணக்கில் தேசிய மின்னனு பணப்பரிவர்த்தனை (National Electronic Fund Transfer (NEFT)) மூலம் எப்பொழுதும் இல்லாத வகையில் குறுகிய காலத்திற்குள் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இந்த அரசு, முன்னோடி திட்டமான "புதிய தூண்டில் முறை சூரைமீன்பிடிப்பு மற்றும் செவுள்வலை" (Tuna Long Liner cum Gill Netter) படகுகளை கட்டுவதற்கு 50 விழுக்காடு மானிய உதவி அதிகபட்சமாக, ரூ.30 இலட்சம் வரை மீனவர்களுக்கு வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இந்தியாவிலேயே முதன்முறையாக செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டமானது, அண்மைக்கடல் பகுதியில் உள்ள மீன்பிடி அழுத்தத்தினை குறைத்தும், இதுகாறும் பயன்படுத்தப்படாமலிருக்கும் ஆழ்கடல் மீன்களைப் பிடிப்பதற்கு ஏதுவாகவும் அமையும். இந்த அரசு, 580 மீனவர்கள் பயனுறும் வகையில், 171 சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்காக ஏற்கெனவே ரூ.51.30 கோடி வழங்கியுள்ளது.

இந்த அரசு, மீன்பிடிப்பு மற்றும் மாநிலத்தின் மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை முனைப்புடன் மேம்படுத்தும் விதமாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.1,104.91 கோடி நிதி ஒப்பளித்துள்ளது. மீன்வளப்பிரிவில் வளங்குன்றா மேம்பாட்டிற்குப்

போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும்விதமாக நான்கு மீன்பதனிடும் பூங்காக்கள் திருவள்ளூர், தூத்துக்குடி, மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2015ஆம் ஆண்டின் வடகிழக்கு பருவமழையின் போது ஏற்பட்ட முன்னெப்போதும் இல்லாத பெருமழை காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களை சேர்ந்த பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருமழை மற்றும் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பொது மக்களை காப்பாற்றுவதற்காக மீன்வளத்துறையிலிருந்து 691 இயந்திரம் பொருத்தப்பட்ட/பொருத்தப்படாத நாட்டுப் படகுகள் மற்றும் 2,278 மீனவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இப்பெருவெள்ளத்தில் மீன்பிடி உபகரணங்களை இழந்த மீனவர்களுக்கு ரூ.24.07 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

நடுக்கடலில் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் விதமாக இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சார்ந்த பாரம்பரிய மீன்பிடி படகுகளுக்கு அரசு ரூ.1.62 கோடி செலவில் 11,500 விலையில்லா உயிர்காப்பு மிதவைகளை (Life Buoys) ஏற்கனவே வழங்கியுள்ளது. எஞ்சிய கடலோர மாவட்டங்களிலுள்ள அனைத்து பாரம்பரிய மீன்பிடி படகுகளுக்கும் நடப்பு நிதியாண்டில் உயிர்காப்பு

மிதவைகள் வழங்கப்படவுள்ளன. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு ரூ.48 கோடி செலவில் படிப்படியாக 30,000 அவசர கால எச்சரிக்கை தகவல் பரப்பும் சமிக்ஞை அனுப்பும் கருவிகள் (Distress Alert Transmitter (DAT) வழங்கும் திட்டத்தினை தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மீன்பிடி படகுகளுக்கும் கம்பியில்லா தொலைத்தொடர்பு வசதிகளையும் மற்றும் உயர் அதிர்வெண் (Very High Frequency (VHF)) தொடர்பு சாதனங்களையும் உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.62.14 கோடி செலவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை சேத்துப்பட்டில், துவக்கப்பட்டுள்ள தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமை பூங்கா, பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதோடு அப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டத்தை செறிவூட்டி நீர் நிலையினைப் பாதுகாக்கும் வண்ணம் அமைந்துள்ளது. மாமல்லபுரத்தில் ஒரு உலகத்தரம் வாய்ந்த கடற்காட்சியகத்தை பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு தொடங்கியுள்ளது.

மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தி மற்றும் இறால் உற்பத்தியை அதிகரித்திட மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களான கூண்டுகளில் மீன்வளர்த்தல், மீன்பிடித்திறனை மேம்படுத்துதல், குறுகிய கால நீர் நிலைகளுக்கேற்ற மீனினங்களை அறிமுகம் செய்தல் மற்றும்

சுகாதாரமான மீன்விற்பனை சந்தைகளை உருவாக்குவதற்கு அரசு அதிமுக்கியத்துவம் அளித்து வருகிறது.

மாநிலத்தின் மீன்வளம் மற்றும் மீனவர் நலன் மேம்படுத்த, அரசால் எடுக்கப்பட்டு வரும் புதிய முயற்சிகளை வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்திட அரசு உறுதிபூண்டுள்ளது.

## 2. மீன்வளக் கொள்கைகளும் அதன் தொலைநோக்கு பார்வையும்

தமிழ்நாடு அரசின் முக்கிய மீன்வளக் கொள்கைகள் பின்வருமாறு:

- மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாத்தல்.
- மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- பல்வேறு நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மீனவ மக்களுக்கு சமூகப் பாதுகாப்பினை அளித்தல்.
- பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் மீனவ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
- மீன்களை சுகாதாரமாகக் கையாளவும், பதப்படுத்தவும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி

வலுப்படுத்துதல் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் மீன் விற்பனையை ஊக்குவித்தல்.

- சட்டப்பூர்வ ஒழுங்கு முறைகளான, வலைகளின் கண்ணி அளவினை ஒழுங்குபடுத்துதல், அழிவினை ஏற்படுத்தும் வலைகளின் பயன்பாட்டினை தடை செய்தல் போன்றவற்றை அமலாக்கம் செய்வதன் மூலம், மீன்வள ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் மீன்வள இருப்புகளை அதிகப்படுத்துதல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல்.
- தூரக் கடல் மீன்பிடிப்பு / ஆழ்கடல் மீன்பிடிப்பினை, குறிப்பாக சூரை மீன்பிடிப்பினை மாற்று முறை மீன்பிடிப்பாக மேற்கொள்வதற்கு, மீனவர்களுக்கு நிதி உதவி அளித்தல் மற்றும் ஆழ்கடல் மீன்பதனிடும் அலகினை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் மீன்வள ஆதாரங்களை மேலாண்மை செய்தல்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த நீர்வாழ் உயிரின வளர்ப்பு / மீன்பிடிப்பு முறைகளை ஊக்குவித்தல் மற்றும் ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணியை ஈட்டுதல்.
- மனிதவளத் தேவையினை பூர்த்தி செய்ய மீன்வளம் சார்ந்த கல்வி மற்றும் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்துதல்.
- ஊரக வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.
- மீன்வள கூட்டுறவு அமைப்புகளை வலுப்படுத்துதல்.

- ஆற்றல் வாய்ந்த, திறமைமிக்க மற்றும் ஒளிவுமறைவற்ற நிர்வாகத்தினை உறுதிப்படுத்துதல்.

## 3. கடந்த ஐந்தாண்டுகளில் எய்தப்பட்ட சாதனைகள் (2011-12 முதல் 2015-16 வரை)

கடந்த ஐந்து ஆண்டுகளில் (2011 -2012 முதல் 2015 -16 வரை) மீன்வளத்துறையில் எய்தப்பட்ட முக்கிய சாதனைகளின் விவரம் பின்வருமாறு:

1. மீன்பிடிப்பு குறைந்த பருவ காலத்திற்கு கடல் மீனவ குடும்பம் ஒன்றுக்கு ரூ.4,000/- வீதம் நிவாரண உதவி வழங்குதல் மற்றும் மீன்பிடி தடைக்காலத்திற்கு நிவாரண உதவியாக ரூ.2,000/- வழங்குதல் ஆகிய இந்த அரசின் திட்டங்களின் கீழ் கடல் மீனவ குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.479.43 கோடி வழங்கப்பட்டுள்ளது.
2. 2014-15 ஆம் ஆண்டில் மீனவ மகளிர் மற்றும் மீனவர்களுக்கான, மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் தேசிய மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ் நிவாரண உதவி, ரூ.1,800/- லிருந்து ரூ.2,700/- ஆக உயர்த்தப்பட்டது. மேற்கண்ட திட்டங்களின் கீழ், கடந்த ஐந்தாண்டுகளில், ரூ.270.17 கோடி நிவாரண உதவியை நேரடியாக மீனவ மக்களின் வங்கி கணக்கில் தேசிய மின்னணு பண பரிவர்த்தனை முறையில் இதுவரை

இல்லாத அளவிற்கு குறைந்த கால அளவிற்குள் வழங்கியுள்ளது.

3. அண்மைக்கடல் பகுதியில் உள்ள மீன்பிடி அழுத்தத்தை குறைக்கவும், தூரக்கடல் பகுதியில் பிடிக்கப்படாமல் உள்ள மீன்வள ஆதாரங்களை உகந்த அளவில் பிடித்திடவும், புதிய “தூண்டில் முறை சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள்வலை” (Tuna Long Liner Cum Gill Netter) படகுகள் கட்டுவதற்கு, மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியமாக, அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை வழங்கும் திட்டம், நாட்டிலேயே முதல் முறையாக செயல்படுத்தப்படும் திட்டம் ஆகும். 580 மீனவர்கள் பயனடையும் வகையில் 171 படகுகள் கட்டுவதற்கு அரசு ரூ.51.30 கோடி ஒப்பளித்துள்ளது.

4. கடந்த ஐந்தாண்டுகளில், மீன்பிடித்தல் மற்றும் மீன்வளம் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ரூ.1,104.91 கோடி ஒப்பளித்ததன் மூலம் நிலைத்த வளர்ச்சிக்கு வழிவகை செய்துள்ளது.

5. மீன்வளத்தில் நிலைத்த வளர்ச்சியை உருவாக்கத் தேவையான போதிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திடும் பொருட்டு திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நான்கு மீன் பதனிடும் பூங்காக்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

6. 2015ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது, மீன்வளத்துறையின் மூலம் மொத்தம் **2,278** மீனவர்கள், 691 இயந்திரம் பொருத்தப்பட்ட மற்றும் இயந்திரம் பொருத்தப்படாத மீன்பிடி படகுகளுடன் மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், மீன்பிடி உபகரணங்களை இழந்த மீனவர்களுக்கு ரூ.24.07 கோடி நிவாரண உதவியாக அரசு வழங்கியுள்ளது.

7. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இடையறாத நடவடிக்கைகளின் மூலமாக மே 2011ஆம் ஆண்டிலிருந்து மொத்தம் 2,481 மீனவர்களும் 357 மீன்பிடி படகுகளும், இலங்கை கடற்படையால் பொய்யாக புனையப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு, 29.11.2011 முதல் இலங்கை சிறையில் வாடிய இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் உட்பட, இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, தமிழகம் கொண்டு வரப்பட்டனர்.

8. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட இடைவிடாத மற்றும் போர்க்கால அடிப்படையிலான நடவடிக்கைகளின் பயனாக, ஈரான் சிறையிலிருந்த 44 மீனவர்கள் ஈரான் அரசால் விடுதலை செய்யப்பட்டனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விடுதலை செய்யப்பட்ட 44 மீனவர்களும் 3.03.2016 அன்று தமிழகம் அழைத்து வரப்பட்டு

அவர்களது சொந்த ஊர்களுக்கு அரசின் செலவில் அனுப்பிவைக்கப்பட்டனர். மேலும், மீனவ குடும்பங்களின் வறிய நிலையை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, மீனவர் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.5 இலட்சம் வீதம் உதவித் தொகை வழங்க உத்தரவிட்டு, அத்தொகை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

9. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர் நடவடிக்கைகளின் பயனாக, மீன்பிடிக்க அனுமதிக்கப்படாமலும், தமிழகம் திரும்ப இயலாமலும் "அஜ்மானில்" நிறுத்திவைக்கப்பட்டிருந்த தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மீனவ கிராமங்களைச் சேர்ந்த 23 தமிழக மீனவர்கள், 12-7-2016 மற்றும் 14-07-2016 ஆகிய நாட்களில் தமிழகம் அழைத்து வரப்பட்டு, பின்னர் அவர்களது சொந்த ஊர்களுக்கு அரசின் செலவில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

10. அரசு, 30,000 ஆபத்து கால எச்சரிக்கை தகவல் பரப்பும் கருவிகளை(Distress Alert Transmitter) ரூ.48 கோடி செலவில் படிப்படியாக மீனவர்களுக்கு வழங்கி வருகிறது.

11. ரூ.42 கோடி செலவில் சென்னை சேத்துப்பட்டு ஏரியில் நிறுவப்பட்டுள்ள "பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு

மற்றும் பசுமை பூங்கா'' (Sports Fishing Cum Eco Park) பொதுமக்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்றுள்ளதுடன், அப்பகுதியின் நிலத்தடி நீர்மட்டத்தினை செறிவூட்டிடும் விதமாகவும் அமைந்துள்ளது.

12. தமிழகத்தின் மீன்வளப்பிரிவில் தொழில்முறை தகுதி பெற்ற மனிதவள ஆதாரங்களை உருவாக்குவதன் மூலம் மீன் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் உயர்த்துவதற்காக, "உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரத்திற்கு மீன்வள அறிவியலை பயன்படுத்துதல்" என்ற தொலைநோக்கு பார்வையுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாகப்பட்டினத்தில் இந்தியாவின் முதல் "மீன்வள பல்கலை கழகத்தை'' நிறுவினார்கள்.

13. தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் 81 மாணவர்களுக்கு மீன்வள அறிவியல் (B.F.Sc) தொழில்நுட்ப பட்டப்படிப்பு வழங்கி வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழகத்தில் மீன்வள பொறியியல் B.E (Fisheries) என்ற நான்கு ஆண்டு தொழில்நுட்ப பட்ட படிப்பு துவங்கப்பட்டு ஆண்டுதோறும் 20 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

14. தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை 4.5 இலட்சம் டன்களாக உயர்த்துவதற்கு சராசரியாக 70 கோடி மீன் விரலிகள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. 2014-15ஆம்

ஆண்டில் 45 கோடி மீன் விரலிகள் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில் மேலும் 25 கோடி மீன்விரலிகள் தேவைப்பட்டது. இந்த தேவையினை பூர்த்தி செய்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் மீன்வளத்துறையில் பல்வேறு திட்டங்களின் மூலம் அரசு மீன் பண்ணைகள் மற்றும் தனியார் மூலமாக 34.8 ஹெக்டேர் மீன்குஞ்சு வளர்ப்பிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் 2015-16 ஆம் ஆண்டில் எப்போதுமில்லாத வகையில் மிக அதிகமாக 61.27 கோடி மீன் விரலிகள் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதனால் மீன் விரலிகளின் தேவைக்கும், உற்பத்திக்குமிடையேயான இடைவெளி 25 கோடியிலிருந்து 8.73 கோடியாக குறைந்துள்ளது.

15. உள்நாட்டு மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட குறிப்பாக பருவ கால குளங்கள் மற்றும் பண்ணைக்குட்டைகள் / பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் இருப்பு செய்வதற்காக மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா (Genetically Improved Farmed Tilapia (GIFT)) குஞ்சுகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக அரசு மீன்குஞ்சு பொரிப்பகத்தை கிருஷ்ணகிரியில் நிறுவியுள்ளது.

16. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.3.48 கோடியினை முதன்முறையாக மாநில அரசிற்கு பங்குத் தொகையாக செலுத்தியுள்ளது.

17. 2011–12 ஆம் ஆண்டிலிருந்து இதுநாள் வரை மீன்வளத்துறையின் பல்வேறு நிலைகளிலுள்ள 450 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

## 4. தமிழகத்தின் மீன்வளம் – ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாட்டின் மீன்வளமானது கடல் மீன்வளம், உள்நாட்டு மீன்வளம் மற்றும் உவர்நீர் மீன்வளம் என வகைப்படுத்தப் பட்டுள்ளன. 2015–16ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த மீன் உற்பத்தி 7.08 இலட்சம் டன்களாகும். நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 4வது இடத்தை வகிக்கும் தமிழ்நாடு, 85,063 மெட்ரிக் டன் கடல் பொருட்களை ஏற்றுமதி செய்து 2015–16ம் ஆண்டில் ரூ.4,184.06 கோடி அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளது.

### 4.1 கடல் மீன்வளம்

தமிழ்நாடு 13 கடலோர மாவட்டங்களை உள்ளடக்கி, 1,076 கி.மீ நீளமுள்ள, இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு 1.9 இலட்சம் சதுர கிலோ மீட்டர் தனியுரிமை பொருளாதார மண்டலத்தையும், (Exclusive Economic Zone (EEZ)), 41,412 சதுர கிலோ மீட்டர் கடற்படுகை நிலத்தொடரையும் (Continental shelf) கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் 13 கடலோர மாவட்டங்களிலுள்ள

608 மீனவ கிராமங்களில் வசிக்கும் கடலோர மீனவ மக்கள் தொகை 9.64 இலட்சமாகும். கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள 1,016 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரை மற்றும் மேற்கு பகுதியில் அமைந்துள்ள 60 கி.மீ நீளமுள்ள கடற்கரையை ஒட்டிய அண்மைக் கடல் பகுதியில் மீன்வள ஆதாரங்கள் அளவிற்கதிகமாக பிடிக்கப்பட்ட நிலையில், தூரக்கடல் மற்றும் ஆழ்கடல் பகுதியில் உள்ள மீன்வளம் இன்னும் உகந்த அளவிற்கு பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது. மாநிலத்தின், மதிப்பிடப்பட்ட கடல் மீன் உற்பத்தி திறனான 7 இலட்சம் டன் மீன்களில், 4.66 இலட்சம் டன் மீன்கள் தற்போது பிடிக்கப்பட்டு வருகிறது.

கடல் மீன்வளம் குறித்த சிறு கண்ணோட்டம் அட்டவணை 1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1:**
**கடல் மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள் 2015–16**

| | |
|---|---|
| கடற்கரை நீளம் | 1,076 கி. மீ. |
| கடலோர மாவட்டங்களின் எண்ணிக்கை | 13 |
| மீனவ கிராமங்களின் எண்ணிக்கை | 608 |
| கடலோர மீனவ மக்கள் தொகை (உத்தேச மதிப்பீடு) | 9.64 இலட்சம் * |
| **பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்கள் (இணையதளம் மூலம்) (15.07.2016)** | |
| 1. மீன்பிடி விசைப்படகுகள் | 5,862 |
| 2. நாட்டுப்படகுகள் (இயந்திரம் பொருத்தப்பட்டவை மற்றும் இயந்திரம் பொருத்தப்படாதவை ) | 34,147 (28,886 + 5,261) |

| **உட்கட்டமைப்பு வசதிகள்** | |
|---|---|
| பெரிய மீன்பிடி துறைமுகங்கள் | 4(சென்னை, தூத்துக்குடி சின்னமுட்டம், மு ட்டம்) |
| கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் பெரிய மீன்பிடி துறைமுகங்கள் | 3 (தேங்காப்பட்டினம், குளச்சல், பூம்புகார்) |
| நடுத்தர மீன்பிடித் துறைமுகங்கள் | 4 (பழையாறு, மல்லிப்பட்டினம், கடலூர், நாகப்பட்டினம்) |
| மீன் இறங்கு தளங்கள் | 36 |
| மீன் இறங்கு மையங்கள் | 254 |
| கடல்மீன் உற்பத்தி **(2015–16)** | 4.66 இலட்சம் டன் * |
| கடல்பொருள் ஏற்றுமதி **(2015–16)** ** (உத்தேச மதிப்பீடு) | 85,063 மெட்ரிக் டன்** (மதிப்பு ரூ.4,184.06 கோடி ) |

ஆதாரம் :

* தமிழ்நாடு மீன்வளத்துறை புள்ளி விவரங்கள்

** கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் (MPEDA)

## 4.2 உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டில் மீன்வளர்ப்பிற்கு உகந்த நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசன குளங்கள், பருவ மழையினால் நிரம்பும் குறுகிய கால குளங்கள் மற்றும் குட்டைகள், ஆறுகள், கழிமுகங்கள் மற்றும் இதர நீர்நிலைகளை உள்ளடக்கிய, பல்வேறு உள்நாட்டு நீர்வள ஆதாரங்கள் **3.83** இலட்சம் ஹெக்டேர் பரப்பில் உள்ளன. இந்நீர்வள ஆதாரங்கள் பருவ மழையைச் சார்ந்துள்ளதாகவும், இவற்றில் நீர் தேங்கியிருக்கும் / நீர்பிடிப்பு காலம் குறைவானதாகவும் உள்ளன. குறைந்த மற்றும் காலம்

தவறிய பருவ மழை, நீர்நிலைகளில் குறுகிய கால நீர் இருப்பு, சினை மீன்கள் தயாராகும் காலத்தில் போதிய நீர் இல்லாமை, நீர் உள்ள காலங்களில் சினை மீன்கள் மீன்குஞ்சு உற்பத்திக்குத் தயாராகாமல் இருப்பது மற்றும் குறைந்த விலையில் தரமான மீன் தீவனம் கிடைக்காமை போன்றவை உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெரிதும் பாதிக்கக்கூடிய காரணிகளாக உள்ளன. உள்நாட்டு மீனவ மக்கள் தொகையானது சுமார், 2.28 இலட்சம் ஆகும். குறைவான பருவமழையினாலும், குளம் மற்றும் குட்டைகளில் குறுகிய காலமே நீர் இருப்பதாலும் குறுகிய காலத்தில் வேகமாக வளரும் மீன் இனங்களான 'அமூர் கெண்டை', (Amur carp) 'மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா' (Genetically Improved Farmed Tilapia (GIFT)), 'ஜெயந்தி ரோகு' மற்றும் கெளுத்தி வகையைச் சார்ந்த 'பங்கேசியஸ்' (Pangassius) போன்ற மீன் இனங்களை இருப்பு செய்வது அவசியமாகிறது. உள்நாட்டு மீன்வளம் குறித்த சிறு கண்ணோட்டம் அட்டவணை 2–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 2**

**உள்நாட்டு மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள் (2015–16)**

| | | |
|---|---|---|
| உள்நாட்டு மீன்வள பரப்பளவு | : | **3.83** இலட்சம் ஹெக்டேர் |
| நீர்த்தேக்கங்கள் (78 எண்ணிக்கை*) | : | **62,015** ஹெக்டேர் |
| நீண்டகால மற்றும் குறுகியகால குளங்கள் | : | **2,65,819** ஹெக்டேர் |
| உவர்நீர் பரப்பளவு | : | **56,000** ஹெக்டேர் |
| உள்நாட்டு மீனவ மக்கட்தொகை (உத்தேச மதிப்பீடு) | : | **2.28** இலட்சம் |

| | | |
|---|---|---|
| **மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள்** | : | |
| i) அரசு மீன்பண்ணைகள் | : | 8 |
| ii) தனியார் மீன்பண்ணைகள் | : | 49 |
| **மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்** | : | |
| i) அரசு மீன்பண்ணைகள் | : | 34 |
| ii) தனியார் மீன்பண்ணைகள் | : | 180 |
| 2015–16 ஆம் ஆண்டு உள்நாட்டு மீன் உற்பத்தி | : | 2.42 இலட்சம் டன் |

*பொதுப்பணித்துறையின் கீழ் மொத்தமுள்ள 78 நீர்த்தேக்கங்களில் 61 நீர்த்தேக்கங்கள் மீன்வளத்துறையால் மீன் வளர்ப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் சராசரி மழை பெறும்போது உள்நாட்டு மீன் உற்பத்தி 4.50 இலட்சம் டன்கள் பெறலாம். அதற்கு 70 கோடி மீன்விரலிகள் தேவைப்படும். தமிழக அரசு பல்வேறு திட்டங்களான தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் (National Agriclture Development Programme - NADP), தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (National Fisheries Development Board-NFDB), தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் (Irrigated Agriculture Modernization and Water-Bodies Restoration and Management - IAMWARM) மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டு திட்டம் (Western Ghat Development Programme-WGDP), நபார்டு (National Bank for Agriculture and Rural

Development - NABARD) போன்ற திட்டங்களால் அரசு மீன்பண்ணைகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் மூலம் அரசு மற்றும் தனியார் மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் உருவாக்கிட ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இதனால் கூடுதலாக **34.8** ஹெக்டேர் பரப்பளவில் அரசு மற்றும் தனியார் மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் உருவாக்கப்பட்டு, **2015–16**ஆம் ஆண்டு மிக அதிக அளவில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவான **61.27** கோடி மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பபட்டு மீன்குஞ்சு தேவை இடைவெளி **25** கோடியில் இருந்து **8.73** கோடி என குறைந்துள்ளது.

## 4.3 உவர்நீர் மீன்வளம்

தமிழ்நாட்டில், மொத்த உவர்நீர் பரப்பளவு **56,000** ஹெக்டேர் ஆக உள்ளது. இது மீன்பிடிப்பிற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் **7,100** ஹெக்டேர் பரப்பளவில் கடலோர நீர்வாழ் உயிரின உற்பத்தி குறிப்பாக இறால்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இறால் வளர்ப்பு தொழில் போதுமான அளவில் வளர்ச்சி பெற்று, குறிப்பிட்ட நோய்கிருமிகளற்ற "வெனாமி" இறால்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒரு பெரிய பொருளாதார செயல்பாடாக உருவெடுத்துள்ளது. இதுவரை **1,734** இறால் பண்ணைகள் **(3,514.65** ஹெக்டேர்**)** மற்றும் **51** இறால் குஞ்சு பொரிப்பகங்கள் இந்திய கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு

ஆணை சட்டம் **2005–ன்** படி பதிவு செய்யப்பட்டுள்ளன. அரசு புறம்போக்கு மற்றும் வனத்துறை நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து உருவாக்கப்பட்ட இறால் பண்ணைகள் மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் பதிவினைப் பெறாமல், பட்டா நிலங்களில் இயங்கி வந்த **428** இறால் பண்ணைகளின் மீது அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வாரியாக, கடலோர நீர்வாழ் உயிரின ஆணையத்தில் பதிவினைப் பெற்ற இறால் பண்ணைகள் மற்றும் இறால் குஞ்சு பொறிப்பகங்கள் விவரம் அட்டவணை **3**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை.3:**

**மாவட்ட வாரியாக கடலோர நீர்வாழ் உயிரின ஆணையத்தில் பதிவினை பெற்ற இறால் பண்ணைகள் மற்றும் பொரிப்பகங்கள்**

| வ. எண் | மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட இறால் பண்ணைகள் | | வெனாமி இறால் வளர்ப்பிற்காக அனுமதி பெற்ற பண்ணைகள் | | இறால் குஞ்சு பொரிப் பகம் |
|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நீர் பரப்பு (ஹெக்டேரில்) | எண்ணிக்கை | நீர் பரப்பு (ஹெக்டேரில்) | எண்ணிக்கை |
| 1 | திருவள்ளூர் | 52 | 159.36 | 7 | 67.38 | - |
| 2 | காஞ்சிபுரம் | 74 | 96.18 | 12 | 27.84 | 18 |
| 3 | விழுப்புரம் | 25 | 44.68 | - | - | 28 |
| 4 | கடலூர் | 129 | 227.46 | 8 | 49.95 | 1 |
| 5 | நாகப்பட்டினம் | 809 | 1,512.55 | 56 | 257.59 | 3 |
| 6 | திருவாரூர் | 154 | 394.45 | 10 | 70.64 | - |
| 7 | தஞ்சாவூர் | 301 | 618.86 | 18 | 129.79 | - |
| 8 | புதுக்கோட்டை | 57 | 121.15 | - | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | இராமநாதபுரம் | 111 | 252.68 | - | - | 1 |
| 10 | தூத்துக்குடி | 21 | 86.78 | 2 | 37.02 | - |
| 11 | கன்னியாகுமரி | 1 | 0.5 | - | - | - |
| | மொத்தம் | **1,734** | **3,514.65** | **113** | **640.21** | **51** |


## 5. நிர்வாக அமைப்பு

மீன்துறை ஆணையர், துறையின் தலைவராகவும், தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உள்பட அனைத்து மீனவ கூட்டுறவு சங்கங்களின் நடைமுறை சார்ந்த பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்.

மீன்வள மேம்பாடு மற்றும் மீனவர் நலத்திட்டங்கள், 47 மீன்துறை உதவி இயக்குநர்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் மற்றும் மேற்பார்வையிடவும், மாநில அளவில் 10 மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில், சென்னை, நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய 3 மண்டலங்களில் மீன்துறை இணை இயக்குநர்கள் தலைமையிலும் மற்றும் கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், நாகர்கோயில், தருமபுரி மற்றும் பவானிசாகர் ஆகிய 7 மண்டலங்களில் மீன்துறை துணை இயக்குநர்கள் தலைமையிலும் இயங்கி வருகின்றன. மேலும்,

தலைமைப் பொறியாளர் தலைமையில் செயல்பட்டுவந்த பொறியியல் பிரிவு, சென்னை, நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் நாகர்கோயில் என நான்கு கோட்டங்களாக பிரிக்கப்பட்டு, **13** உபகோட்டங்களின் மூலமாக பொறியியல் பணிகள் கண்காணிக்கப்படுகின்றன. மீன்வளத்துறையின் நிர்வாக அமைப்பு பின்வரும் படம் **1–**ல் காட்டப்பட்டுள்ளது.

**படம் 1:**




மீன்வளத்துறையின் ஒப்பளிக்கப்பட்ட மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை 1,687 ஆகும், பதவி வாரியாக ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரம் அட்டவணை **4**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 4**
**பதவி வாரியாக ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்**

| வ.எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | கூடுதல் மீன்துறை இயக்குநர் | 03 |
| 2. | மீன்துறை இணை இயக்குநர் | 06 |
| 3. | மீன்துறை துணை இயக்குநர் | 12 |
| 4. | மீன்துறை துணை இயக்குநர் (பொறியியல்) | 01 |
| 5. | நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர் | 01 |
| 6. | மீன்துறை துணை இயக்குநர் (பணியாளர்) | 01 |
| 7. | மீன்துறை உதவி இயக்குநர் | 51 |
| 8. | நேர்முக உதவியாளர் | 12 |
| 9. | துணை பதிவாளர் | 01 |
| 10. | கணக்கு அலுவலர் | 01 |
| 11. | மீன்துறை ஆய்வாளர் | 166 |
| 12. | கூட்டுறவு சார் பதிவாளர் | 15 |
| 13. | கடல் முதல்வர் | 14 |
| 14. | மீன்துறை சார் ஆய்வாளர் | 85 |
| 15. | கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர் | 27 |
| 16. | இதர பணியாளர்கள் | 1,191 |
| | **மொத்தம்** | **1,587** |
| **பொறியியல் பிரிவு** | | |
| **வ. எண்** | **பதவியின் பெயர்** | **ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்** |
| 1. | தலைமைப்பொறியாளர் | 01 |
| 2. | செயற்பொறியாளர் | 06 |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 14 |
| 4. | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 30 |
| 5. | முதுநிலை வரைவு அலுவலர் | 01 |
| 6. | வரைவு அலுவலர் | 08 |
| 7. | இளநிலை வரைவு அலுவலர் | 04 |

| | | |
|---|---|---|
| 8. | கோட்ட கணக்கு அலுவலர் | 04 |
| 9. | தொழில்நுட்ப உதவியாளர் | 23 |
| 10. | இதர பணியாளர்கள் | 09 |
| | **மொத்தம்** | **100** |

2015-16ஆம் ஆண்டில், துறையில் பல்வேறு நிலையிலுள்ள 73 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இவை தவிர, பல்வேறு நிலைகளிலுள்ள 109 பணியிடங்கள் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் விரைவில் நிரப்பப்படவுள்ளன.

## 5.1 மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள்

**2015–**ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவிலிருந்து **475** மனுக்கள் பெறப்பட்டு, அனைத்திற்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. **2016–**ஆம் ஆண்டில் இது வரையில் **191 (25.07.2016** வரை) மனுக்கள் பெறப்பட்டு, அதில் **159** மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இம்மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் சம்மந்தப்பட்ட மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 6. தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல்

## 6.1 “கச்சத் தீவினை திரும்பப் பெறுதல்” – பிரச்சனைகள் மற்றும் தற்போதைய நிலைமை

கச்சத்தீவினை இந்தியாவிற்கு மீளப்பெறுதல் மற்றும் பாக் வளைகுடா பகுதியில் தமிழ் நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்டுதல் ஆகியவைகள் தமிழ்நாடு அரசின் முதன்மையான குறிக்கோள்களாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தனிப்பட்ட முறையில் உச்சநீதிமன்றத்தில் கச்சத்தீவினை மீட்பது தொடர்பாக 2008ல் தொடரப்பட்ட வழக்கு எண் 561/2008ல், தமிழக அரசின் வருவாய்துறையினையும் ஒரு வாதியாக இணைத்துக் கொள்ள, கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேற்காணும் வழக்கில் வருவாய்த்துறையால் ஒரு இணைப்பு பிரேரணை தாக்கல் செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசு தன்னையும் இந்த வழக்கில் இணைத்துக் கொண்டது.

மேலும், 1960ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் "பெருபாரி" வழக்கில், இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை, நாடாளுமன்றத்தின் ஒப்புதலோடு இந்திய அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என அளித்த தீர்ப்பின் அடிப்படையில், 1974 மற்றும் 1976ஆம் வருடத்திய இந்திய–இலங்கை ஒப்பந்தங்கள் சட்டப்பூர்வமாக செல்லுபடியாகாது என்ற நிலைப்பாட்டினை முன்னிறுத்தி, கச்சத்தீவை திரும்பப் பெறும் வகையில், 03.05.2013 அன்று தமிழ் நாடு சட்டமன்றத்தில் மற்றொரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும், கச்சத்தீவினை திரும்பப் பெறவும், தமிழ் நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை

நிலைநாட்டவும், மேலும் ஒரு தீர்மானம் **05–12–2014** அன்று, தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கடந்த **3.6.2014, 7.8.2015** மற்றும் **14.6.2016** ஆகிய நாட்களில் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களிடம் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவில், **1974** மற்றும் **1976** ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை இரத்து செய்து, கச்சத்தீவினை மீளப்பெற்று தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிரந்தரமாக நிலைநாட்டிட வலியுறுத்தியுள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **14.6.2016** அன்று மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களிடம் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவில், கச்சத்தீவில் ஏற்கனவே இருக்கும் புனித அந்தோணியார் தேவாலயத்திற்கு கூடுதலாக புதிய கட்டடம் கட்டுவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதையும், கச்சத்தீவில் இலங்கை கடற்படை வீரர்களின் எண்ணிக்கையை கணிசமாக அதிகரித்துள்ளதும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. தமிழ்நாடு மீனவர்கள் கைது நடவடிக்கைகள், அவர்கள் வரலாற்று பூர்வமாகவும், பாரம்பரியமாகவும் அனுபவித்து வந்த கச்சத்தீவுக்கு செல்லும் உரிமையை இலங்கை அரசு மேலும் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்தும் விதமாக உள்ளது .

கச்சத்தீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை நிலைநாட்டி, பாரம்பரிய மீன்பிடிப்பு பகுதிகளில் மீன்பிடிக்கும் உரிமையை நிலைநாட்டுவதன் மூலமே, நமது மீனவர்கள் தொடர்ந்து சந்தித்து வரும் இப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்ற தனது நிலைப்பாட்டினை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்திவருகிறது.

## 6.2 மீனவர்கள் துன்புறுத்துதலை தடுக்கவும் மற்றும் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி படகுகளை விடுவிக்கவும் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தமிழக மீனவர்கள், தங்களின் வாழ்வாதாரத்திற்காக பாரம்பரிய மீன்பிடி பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபடும் பொழுது, அவர்களது பாதுகாப்பினை உறுதி செய்வதை தமிழக அரசு முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழக மீனவர்கள் தொன்றுதொட்டு பாரம்பரியமாக அனுபவித்து வரும் மீன்பிடி உரிமையை நிலைநாட்டி பாதுகாக்க உறுதியுடன் செயல்பட்டு வருகிறார்கள். இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்படும் தொடர் சிறைபிடிப்பு, நீண்டநாட்களுக்கு தேவையற்ற முறையில் ஏதுமறியாத அப்பாவி தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையால் தொடர்ந்து சிறைபிடித்தல், அவர்கள் மீது தாக்குதல்கள் நிகழ்த்துதல் மற்றும் துன்புறுத்துதல் போன்ற செயல்கள், அவர்களது வாழ்வுரிமை,

வாழ்வாதாரம் மற்றும் பாக் வளைகுடாப் பகுதியில் பாரம்பரியமான மீன்பிடிப்பு பகுதியில் மீன்பிடிக்கும் உரிமைகளின் மீது அத்துமீறுவதாகவும் அமைந்துள்ளது. தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதல் நிகழ்வுகள், துன்புறுத்துதல், சிறைபிடித்தல் மற்றும் நீண்ட நாட்களாக நமது அப்பாவி மீனவர்களை இலங்கை சிறையில் நிறுத்திவைத்தல் ஆகிய நிகழ்வுகளில் ஆழ்ந்த அக்கறைக் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனது 102 கடிதங்கள் வாயிலாக இந்நிகழ்வுகளை மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்கள்.

மேலும், மத்திய அரசு தனது அனைத்து விதமான இராஜாங்க ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு, கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவித்திடுவதை உறுதி செய்யவும், மீண்டும் அத்தகைய சம்பவங்கள் நடப்பதைத் தடுத்திடவும், தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார்கள்.

இலங்கை அரசால் முடக்கி வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களின் 79 படகுகளை உடனடியாக விடுவித்திட அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கடந்த 05.12.2014 அன்று, தமிழக சட்டமன்ற கூட்டத்தில் தமிழக

அரசால் தீர்மானம் ஏகமனதாக இயற்றப்பட்டது. மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இடைவிடாத முயற்சியின் பயனாக, இலங்கை அரசால் 2014 ஜுன் மாதம் முதல் முடக்கி வைக்கப்பட்டிருந்த எஞ்சிய 80 படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன. விடுவிக்கப்பட்ட 80 படகுகளில், முதற்கட்டமாக 34 படகுகள் 19.03.2015 அன்றும் இரண்டாம் கட்டமாக 30 படகுகள் 30.04.2015 அன்றும் தமிழகத்திற்கு கொண்டுவரப்பட்டன. எஞ்சிய 16 படகுகள் கடலில் மூழ்கியமையால் தமிழகம் கொண்டுவர இயலவில்லை. மேலும், நாளது தேதி வரை இலங்கை அரசால் முடக்கிவைக்கப்பட்டுள்ள 102 படகுகளை விடுவித்திடவும் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இடைவிடாத முயற்சி மற்றும் உறுதியான நடவடிக்கைகளின் பயனாக கடந்த மே 2011 முதல் 2,481 மீனவர்களும், அவர்களது 357 மீன்பிடி படகுகளும் பின்வரும் விவரப்படி இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு தமிழகம் அழைத்து வரப்பட்டனர். அதன் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை:5**

**இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகள் விவரம்**

| வருடம் | விடுவிக்கப்பட்ட மீனவர்கள் | விடுவிக்கப்பட்ட படகுகள் |
|---|---|---|
| 2011 | 222 | 40 |

| | | |
|---|---|---|
| 2012 | 219 | 39 |
| 2013 | 645 | 119 |
| 2014 | 787 | 158 |
| 2015 | 378 | 1 |
| 2016 | 230 | 0 |
| மொத்தம் | 2,481 | 357 |

முன்னெப்பொழுதும் இல்லாத நிகழ்வாக, போதைப்பொருள் கடத்தியதாகப் புனையப்பட்ட வழக்கில், 29.11.2011 அன்று கைது செய்யப்பட்டு சிறையில் வாடிய இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 5 அப்பாவி மீனவர்களுக்கு, கொழும்பு உயர்நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது. அம்மீனவர்கள், 2011ல் கைது செய்யப்பட்டதிலிருந்து, அவர்களின் விடுதலைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இடைவிடாது பல்வேறு சட்டபூர்வமான மற்றும் இராஜாங்க ரீதியிலான முயற்சிகள் எடுத்து வந்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த பெரும் முயற்சியினால் இந்த 5 மீனவர்களும் 19.11.2014 அன்று விடுவிக்கப்பட்டு, 20.11.2014 அன்று, தமிழ்நாட்டிற்கு திரும்ப அழைத்துவரப்பட்டனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்பேரில், அரசு செலவில் 20.11.2014 அன்று, சொந்த ஊருக்கு பத்திரமாக கொண்டு சேர்க்கப்பட்டனர். இம்மீனவர்களை காப்பாற்றிட வழக்கு தொடர்பான செலவினம் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்திற்காக மொத்தம்

ரூ.**65.10** இலட்சம் தமிழக அரசால் நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

## 6.3 இந்திய இலங்கை மீனவர் அளவிலான பேச்சுவார்த்தை

இந்திய இலங்கை நாடுகளை சேர்ந்த மீனவ சங்கங்களிடையே கருத்துகளை பரிமாறிக் கொள்வதற்கு ஏதுவாக, நேரிடை பேச்சு வார்த்தையை நடத்த வேண்டும் என்ற தமிழக மீனவ சங்கங்களின் உணர்வு பூர்வ விருப்பத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்று, தமிழ்நாடு மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையே பேச்சு வார்த்தையை சென்னையில் நடத்துவதற்கு ஏற்பாடுகளை செய்திடுமாறு மத்திய அரசினை கேட்டுக் கொண்டார்கள். அதன்பேரில், முதல் கட்ட பேச்சுவார்த்தை கடந்த **27–01–2014** அன்று சென்னையிலும், அடுத்தகட்ட பேச்சுவார்த்தை இலங்கையிலுள்ள கொழும்புவில் **12.05.2014** அன்றும், மூன்றாம் கட்ட பேச்சு வார்த்தை **24.3.2015** அன்று சென்னையிலும் நடைபெற்றது.

சென்னையில் **24.3.2015** அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில், இந்திய (தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி) மீனவர்கள் தங்களது கோரிக்கைகளை முன்வைத்தனர். இப்பேச்சு வார்த்தையில் முன்வைக்கப்பட்ட இந்திய மீனவர்களின் கோரிக்கைகளை, இலங்கை மீனவர்கள், இலங்கையிலுள்ள வடக்கு

மற்றும் கிழக்கு மாகாண மீனவர்களிடம் கலந்தாலோசனை செய்து அதன் முடிவினை தெரிவிப்பதாக கூறினார்கள்.

இதனைத் தொடந்து, சென்னையிலுள்ள இலங்கை துணை தூதரகம் தனது கடிதத்தில், இலங்கையின் வடகிழக்கு மாகாண பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகளின் **14.05.2015** தேதிய கூட்டத்தில், இந்திய படகுகளை பாக் வளைகுடா உள்ளிட்ட இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கக் கூடாது என்று தீர்மானித்ததாக தெரிவித்த தீர்மான குறிப்பின் நகலை அனுப்பியுள்ளது.

மீனவர்கள் அளவிலான பேச்சு வார்த்தையினை தொடர்ந்து நடத்தி நிரந்தர தீர்வு காண்பதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது.

## 7. கடல் மீன்வளம்

### அ) நலத்திட்டங்கள்

தமிழகத்தில் வாழும் மீனவர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திட, எப்பொழுதுமே முன்னுரிமை அளித்து, பல்வேறு நலத்திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. நலத்திட்டங்களின் பயன்கள் குறுகிய காலத்திற்குள் வெளிப்படையான வகையில் பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில், அரசு பல்வேறு நலத்திட்டங்களின்

மூலம் வழங்கப்படும் நிதியுதவிகளை, முதன்முறையாக பயனாளிகள் சேமிப்பு வங்கிக்கணக்கில் நேரடியாக சென்றடையுமுகமாக தேசிய மின்னணு பண பரிமாற்றம் National Electronic Fund Transfer (NEFT) மூலம் விடுவித்து வருகிறது. பல்வேறு நலத்திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு :

## 7.1 கடல் மீனவர்களுக்கான தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டம் மத்திய–மாநில அரசுகளின் சம விகித நிதி பங்களிப்போடு, ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் கடல் மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

**2014–15**ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கூட்டத்தொடரின் போது விதி **110**ன் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மீனவர்களுக்கான தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை, ரூ.**1,800/–**லிருந்து ரூ.**2,700/–**ஆக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிட்டார்கள்.

மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், மீனவர் ஒரு மாதத்திற்கு ரூ.**100/–** வீதம் **9** மாதங்களில் ரூ.**900/–**ஐ செலுத்துவர். இத்தொகையுடன் மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புத்

தொகையான ரூ.1,800/— (தலா ரூ 900/—வீதம்) சேர்க்கப்படும். ஆக மொத்தம் மீனவரின் பங்களிப்புத் தொகையுடன் சேர்த்து ரூ.2,700/—ஐ மீன்பிடிப்பு குறைவு காலங்களில் பயனாளிகளுக்கு பட்டுவாடா செய்யப்படும்.

2015—16ஆம் ஆண்டில் அரசு தனது பங்காக ரூ.37.40 கோடியை (மத்திய மாநில அரசுகளின் பங்குத்தொகை) ஒப்பளித்துள்ளது. 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 2,04,814 கடல் மீனவர்களுக்கு மொத்தம் ரூ.36.87 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. நிவாரணத் தொகை, தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) மூலம் பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2016-17ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 7.2 கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டம், மாநிலத்திட்டமாக கடல் மீனவர்களுக்கு செயல்படுத்தப்படும் திட்ட வழிமுறைகளைப் பின்பற்றியே செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2014—15ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கூட்டத்தொடரின்போது, விதி 110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மீனவ மகளிருக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை, ரூ.1,800/—லிருந்து ரூ.2,700/—ஆக உயர்த்தப்படும் என அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள்.

மீனவர்களுக்கு செயல்படுத்தப்படும் திட்டத்தின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், மீனவ மகளிர் ஒரு மாதத்திற்கு ரூ.100/– வீதம் 9 மாதங்களில் ரூ.900/–ஐ செலுத்துவர். இத்தொகையுடன் மாநில அரசின் பங்களிப்புத் தொகை ரூ.1800/– சேர்க்கப்படும். ஆக மொத்தம், மீனவ மகளிரின் பங்களிப்புத் தொகையுடன் சேர்த்து ரூ.2700/–ஐ மீன்பிடி குறைவு காலங்களில் பயனாளிகளுக்கு பட்டுவாடா செய்யப்படும்.

2015–16ஆம் ஆண்டில் அரசு தனது பங்காக ரூ.34.98 கோடியை ஒப்பளித்துள்ளது. தமிழகத்திலுள்ள 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,92,020 கடல் மீனவ மகளிருக்கு, ரூ.34.56 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. நிவாரணத் தொகை, தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) மூலம் பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2016-17ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 7.3 மீன்பிடி தடைக்காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு ரூ.2,000/-ம் வழங்குதல்

கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திட, 2001-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் (கிழக்கு கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15 முதல் மே 29 வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில்

ஜுன் 15 முதல் ஜுலை 29 வரையிலும்) **45** நாட்களுக்கு கடலில் மீன்பிடிப்பு தடை செய்யப்படுகிறது. மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலங்களில், மீன்பிடிபடகுகளில் பணியாளர்களாகவும்/ தினக்கூலிகளாகவும் தொழில் புரியும் மீனவர்கள், வருமானம் ஈட்டுவதற்கு வேறுவழியில்லாததால், அவர்களது குடும்பத்தினைப் பராமரிப்பதற்கு மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். மீன்பிடி படகுகளில் பணியாளர்களாகவும் / தினக்கூலிகளாகவும் கடல் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை மீனவர்களின் துயரத்தைப் போக்கிட இந்த அரசு **2011**ஆம் ஆண்டில் பதவியேற்றப் பின், நிவாரண உதவித் தொகையினை, ரூ.1,000/-லிருந்து ரூ.2,000/-ஆக உயர்த்தியது.

**2015–16**ஆம் ஆண்டில் **1.57** இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை ரூ.**31.50** கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. **2016–17**ஆம் ஆண்டில் **1.65** இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை வழங்கிடும் பொருட்டு ரூ.**33.10** கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, இதுவரை **1,53,112** மீனவ குடும்பங்களுக்கு நிவாரணத்தொகை ரூ.**30.62** கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. நிவாரணத் தொகை, தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையினைத் தொடர்ந்து, **2016–17**ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு தற்போது வழங்கப்பட்டுவரும் மீன்பிடி தடைகால நிவாரணம் ரூ.**2,000/–**ம், ரூ.**5,000/–** ஆக உயர்த்தப்பட்டு நடப்பாண்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 7.4 மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை ரூ.4,000/- வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாநில சட்டப்பேரவையில் வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, **2011**ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில், மீன்பிடி குறைவு காலத்தில் துயருறும் கடலோர மாவட்ட மீனவ குடும்பங்களின் துயரினை களைந்திடும் விதமாக, ரூ.**4000/–** சிறப்பு நிவாரணமாக வழங்கும் புதிய திட்டம் அரசு அறிமுகப்படுத்தப்பட்டு, **2011**ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2015–16**ம் ஆண்டில் தமிழகத்திலுள்ள **13** கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த **1,59,274** கடல் மீனவ குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.**63.70** கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டு பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. நிவாரணத் தொகை, தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையினைத் தொடர்ந்து, **2016–17**ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு தற்போது வழங்கப்பட்டுவரும் மீன்பிடி குறைவுகால நிவாரணம் ரூ.**4,000/–**லிருந்து, ரூ.**5,000/–** ஆக உயர்த்தப்பட்டு நடப்பாண்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 7.5 மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம்

இத்திட்டம் மத்திய மாநில அரசுகளின் சமவிகித நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தில் மீனவர்களிடமிருந்து சந்தா தொகை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. விபத்தில் மரணம் அடையும்/ காணாமல் போகும்/ நிரந்தர ஊனம் அடையும் நேர்வுகளில், மீனவருக்கு காப்புறுதி நிவாரணம் ரூ.**2,00,000/–** வழங்கப்படுகிறது. மேலும், பகுதி ஊனமடையும் மீனவருக்கு காப்புறுதி நிவாரணம் ரூ.**1,00,000/–**மாக வழங்கப்படுவதோடு மருத்துவ செலவினை ஈடு செய்திட, ரூ.**10,000/–** மும் வழங்கப்பட்டு வருகிறது.

**10.12.2015** முதல் **09.12.2016** வரையுள்ள காலத்தில் **7,16,284** கடல் மற்றும் உள்நாட்டு மீனவர் / மீனவ மகளிருக்கும், தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் மீன்பிடி தொழில் சார்ந்த பிரிவில் உறுப்பினர்களாக உள்ள மீனவர் / மீனவ மகளிருக்கும், காப்புறுதி சந்தாத் தொகையாக, ரூ.**72.60** இலட்சம் (மாநில அரசின் பங்காக) புதுடெல்லி, தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு

செலுத்தப்பட்டு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. **2014–15**ஆம் ஆண்டு முதல் **15.07.2016** முடிய, பின்வருமாறு காப்புறுதி நிவாரணம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை:6**
**மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம்– பயனாளிகள் மற்றும் வழங்கப்பட்ட காப்புறுதித் தொகை விவரம்**

| வருடம் | பயனாளிகள் எண்ணிக்கை | நிவாரணத்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2014-15 | 119 | 113.00 |
| 2015-16 | 133 | 118.00 |
| 2016-17 (15.07.2016 வரை) | 103 | 175.00 |

**2016–17** ஆம் ஆண்டிலும் இத்திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7.6 பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமயமாக்குதல்

மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடி கலன்களில் பொருத்துவதற்கான வெளிப்பொருத்தும் இயந்திரம்/ உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு மானிய உதவியை அரசு அளித்து வருகிறது.

மத்திய மாநில அரசுகளின் சரிவிகித பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ், இயந்திரத்தின் விலையில் **50** விழுக்காடு அல்லது ரூ.**30,000/–** இதில் எது குறைவோ அது மீனவர்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டம், 2016-17ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**7.7 தமிழக மீனவர்களுக்கு / மீன்பிடி கலன்களுக்கு ஆபத்துகால எச்சரிக்கை தகவல் பரப்பும் கருவி (Distress Alert Transmitter (DAT)) 90 விழுக்காடு மானியத்துடன் வழங்குதல்.**

கடல் மீன்பிடி தொழிலானது, உலகிலேயே மிக ஆபத்தான தொழில்களில் ஒன்றாக கருதப்படுகிறது. வாழ்வாதாரத்திற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள், அவர்களது உயிருக்கும் உடைமைக்கும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் பலவித அபாயகரமான இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். கடல் நடுவே, ஆழ்கடலில் ஏற்படும் இத்தகைய ஆபத்து தருணங்களில், கரையிலுள்ள சம்பந்தப்பட்டவர்களுடன் ஆபத்து நிலை குறித்து தகவல் தெரிவிக்கத் தேவையான தொலைதொடர்பு வசதிகள் இல்லாமையால் மீனவர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இதனை களையும் பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு, செயற்கைகோள் வழியாக ஆபத்து கால எச்சரிக்கை தகவல் பரப்பும் கருவிகளை (Distress Alert Transmitters) மீனவர்களுக்கு வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், **27.02.2016** அன்று துவக்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், ரூ.48 கோடி திட்ட மதிப்பீட்டில், **30,000** ஆபத்துகால எச்சரிக்கை தகவல் பரப்பும் கருவிகள் மீன்பிடி படகு உரிமையாளர்கள் / மீனவர்களுக்கு படிப்படியாக வழங்கப்படும். முதற்கட்டமாக, **1,600** ஆபத்துகால எச்சரிக்கை தகவல் பரப்பும் கருவிகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 7.8 கடல் மீனவ மக்களுக்கு "பயோமெட்ரிக்" (Bio-metric card) அடையாளஅட்டை வழங்குதல்

### அ) கடல் மீனவர்

மும்பையில் **26.11.2008** அன்று நடந்த தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர், கடலோர பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு, கடல் மீனவர்களுக்கு "பயோமெட்ரிக்" (Bio-metric card) அடையாள அட்டைகளை வழங்குவதற்கான மத்திய அரசின் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.1.16 கோடி நிதி தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, **2.06** இலட்சம் மீனவர்களுக்கு 'பயோமெட்ரிக்' அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. இப்பணி, பெங்களூரிலுள்ள 'பாரத் மின்னனு நிறுவனத்திடம்' ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் **1,36,146** கடல் மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**ஆ) கடல் மீனவ மகளிர்**

மீனவ மகளிருக்கும் ‘பயோமெட்ரிக்’ அடையாள அட்டை வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், பெங்களூருவிலுள்ள “பாரத் மின்னணு நிறுவனத்தின்” மூலம் **34,130** ‘பயோமெட்ரிக்’ அடையாள அட்டைகள் பெறப்பட்டு மீனவ மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளன.

‘பயோமெட்ரிக்’ அடையாள அட்டை பெறாத மீனவர் மற்றும் மீனவ மகளிரில், **1.42** இலட்சம் நபர்களுக்கு இறுதி சுற்றில் ‘பயோமெட்ரிக்’ விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. ‘பயோமெட்ரிக்’ அடையாள அட்டை தயாரிக்கும் பணி முடிந்தவுடன் அவை மீனவர் மற்றும் மீனவ மகளிருக்கு வழங்கப்படும்.

## 7.9 மீன்பிடி கலன்களை இணைய தளம் மூலம் பதிவு செய்தல்

கடல் பாதுகாப்பை உறுதிபடுத்தும் நோக்கில் இந்திய அரசானது, மீன்பிடி கலன்களை இணையதளம் மூலம் பதிவு செய்யும் திட்டத்தை அறிமுகம் செய்து, ரூ.**1.33** கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் **5,862** மீன்பிடி விசைப்படகுகள், **28,886** இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகள் மற்றும்

**5,261** இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுப்படகுகள் **15.07.2016** வரை இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 7.10 **மீனவர்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல் எரியெண்ணெய் வழங்குதல்**

தமிழ்நாடு மீன்வளத்துறையில் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகுகளில் பயன்படுத்தப்படும் அதிவேக டீசல் எரியெண்ணெய்க்கு, தமிழ்நாடு அரசு 100 விழுக்காடு விற்பனைவரி விலக்களித்து வருகிறது. இதன்படி, ஒவ்வொரு விசைப்படகிற்கும், வருடத்திற்கு (மீன்பிடிப்பு உள்ள மாதங்களுக்கு) அதிகபட்சமாக 15,000 லிட்டரும், ஒவ்வொரு இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டு படகிற்கும், வருடத்திற்கு அதிகபட்சமாக 3,600 லிட்டரும் விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

2016-17ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7.11 **பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல்**

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடி கலன்களின்

உரிமையாளர்களுக்கு, விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட தொழிலக மண்ணெண்ணைய் மானிய விலையில், லிட்டர் ஒன்றிற்கு ரூ.25/-வீதம் (மாதமொன்றிற்கு, ஒரு மீன்பிடி கலனுக்கு 200 லிட்டர் வீதம்) 2011-12ஆம் ஆண்டு வரை தமிழக அரசால் வழங்கப்பட்டு வந்தது.

நாட்டுப்படகு மீனவர்களுக்கு, நாட்டுப் படகு இயக்க செலவினத்தை குறைத்திடும் விதமாக **2012–13** ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானிய விலையில் வழங்கப்படும் தொழிலக மண்ணெண்ணெயின் அளவினை, ஒரு படகிற்கு, மாதம் ஒன்றிற்கு, 200 லிட்டரிலிருந்து 250 லிட்டர் ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. **2015–16**ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்திட மண்ணெண்ணெயினால் இயங்கக்கூடிய 4,565 நாட்டுப்படகுகள் பயன்பெறும் வகையில் ரூ.**2,260.38** இலட்சம் அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டு, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் இயங்கும் நாட்டுப் படகுகளுக்கு தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவர் கூட்டுறவு இணையம் மூலமாகவும் , கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மூலமாகவும் தொழிலக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

2016-17ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7.12 மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 10 வது மற்றும் 12வது வகுப்பு மாணவ / மாணவியருக்கு ரொக்கப்பரிசு வழங்குதல்

மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகள் உயர் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, 10 வது மற்றும் 12வது வகுப்பு தேர்வில், மாவட்டம் மற்றும் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் மீனவ மாணவ / மாணவியருக்கு, தமிழக அரசால் ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. இதன் விவரம் பின்வரும் அட்டவணை 7ல் தெரிவிக்கப்பட்டுள்ளது:–

**அட்டவணை:7**
**ரொக்கப் பரிசுகள் விவரம்**

| வ. எண் | விவரம் | ரொக்கப் பரிசு (ரூபாயில்) | | 2014–15ஆம் கல்வியாண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 12ம் வகுப்பு | | 10ம் வகுப்பு | |
| | | 12ம் வகுப்பு | 10ம் வகுப்பு | மாண வர்கள் | மாண வியர் | மாண வர்கள் | மாண வியர் |
| 1) | மாநில அளவில் – முதலிடம் | 10,000/- | 6,000/- | 1 | 1 | 2 | 1 |
| 2) | மாவட்ட அளவில் – முதலிடம் | 6,000/- | 2,000/- | 24 | 21 | 25 | 22 |
| 3) | மாவட்ட அளவில் – இரண்டாமிடம் | இல்லை | 1,000/- | 0 | 0 | 21 | 22 |
| 4) | மாவட்ட அளவில் – மூன்றாமிடம் | இல்லை | 600/- | 0 | 0 | 20 | 22 |
| மொத்தம் | | | | **25** | **22** | **68** | **67** |

**2014–15** ஆம் கல்வி ஆண்டில், அதிக மதிப்பெண் பெற்ற மீனவ சமுதாயத்தைச் சார்ந்த **182** மாணவ மாணவியருக்கு,

**2015–16**ஆம் ஆண்டில் ரூ.**5.42** இலட்சம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

2016-17ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 7.13 திருச்சினாங்குப்பம் மீனவர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் மறுகட்டுமானம்

திருவள்ளூர் மாவட்டம், திருச்சினாங்குப்பத்தில் உள்ள **492** அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ.**24.60** கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக மறுகட்டுமானம் செய்ய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது, **492** குடியிருப்புகளும் இடிக்கப்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டுமானப்பணி நடைபெற்றுவருகிறது.

## ஆ) நிவாரணத்திட்டங்கள்

### 7.14 பிற நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்கு தினஉதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கும் போது அண்டை நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில், நாளொன்றுக்கு ரூ.**50/–** வீதம் தின உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மீனவ குடும்பங்களுக்கு இந்நேர்வுகளில் வழங்கப்பட்டு வந்த தின உதவித் தொகை கடந்த **2011–12**ஆம் ஆண்டு முதல்

ரூ.50/—ஐ ரூ.250/— ஆக உயர்த்தி, வழங்க ஆணையிட்டது. தின உதவித் தொகையை உடனடியாக வழங்கிடும் வகையில், இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2015—16**ம் ஆண்டில், **414** மீனவர்களுக்கு ரூ.**31.31** இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**2016—17**ஆம் ஆண்டிலும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7.15 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, நாளொன்றுக்கு தின உதவித்தொகையாக வழங்கிவந்த ரூ.**50/—**ஐ (மாதமொன்றுக்கு ரூ.**1,500/—** வீதம்) ரூ.**250/—**ஆக உயர்த்தி, (மாதமொன்றுக்கு ரூ.**7,500/—**ஆகவும்) கடந்த **2012** ஆம் ஆண்டு முதல் வழங்கிவருகிறது. **2015—16**ஆம் ஆண்டில், **30** மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.**22.37** இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**2016—17**ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7.16 இலங்கை மற்றும் பிற நாடுகளின் கடற்படையால் துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவரது குடும்பத்தினருக்கும் /காயமடையும் மீனவருக்கும் நிவாரணம் வழங்குதல்

கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்கள், தங்களது பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில், இயந்திர கோளாறு மற்றும் இயற்கை சீற்றம் காரணமாக இலங்கைக் கடற்பகுதிக்குள் படகுகள் அடித்துச் செல்லப்படுவதால், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுதல் / துன்புறுத்தப்படுதல், சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகுதல் போன்ற சம்பவங்களும் ஏற்படுகின்றன.

இவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவரது குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர், அவரது குடும்பத்தில் பொருளீட்டக் கூடிய ஒரே நபராக இருக்கும் பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5 இலட்சமாக வழங்கப்படுகிறது. பலத்த காயம் மற்றும் சிறு காயம் அடையும் மீனவர்களுக்கு கருணைத்தொகையாக முறையே ரூ.50,000/- மற்றும் ரூ.20,000/-ம் வழங்கப்படுகிறது. **2011–**ஆம் ஆண்டு, இந்த அரசு பொறுப்பேற்றது முதல், மேற்கொண்ட தொடர்

முயற்சியின் காரணமாக, இதுநாள் வரை, தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரால் துப்பாக்கி சூடு நிகழ்வு ஏதும் நடைபெறவில்லை.

### 7.17 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்கள் / துப்பாக்கிச் சூட்டில் இறக்கும் மீனவர்களின் பிள்ளைகளின் உயர்கல்வி செலவினங்களுக்காக தனிநிதி ஏற்படுத்துதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று, காணாமல் போகும் மீனவர்கள் / இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு இறக்க நேரிடும் மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, அன்றாட செலவினங்களை சமாளிக்கப் போதுமானதாக இல்லை. மேலும், அம்மீனவர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கி உள்ளதால், அவர்களின் மகன் / மகள்களின் கல்வியைத் தொடரத் தேவையான நிதி வசதியின்றி, மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். இதனால், காணாமல்போகும் / இறக்க நேரிடும் மீனவர்களின் பிள்ளைகள் போதிய நிதி உதவி இல்லாததினால், தங்களது பள்ளி / கல்லூரிப்படிப்பினை தொடர இயலாமல் வேலைவாய்ப்பினைத் தேடிச்செல்லும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இந்த பரிதாப நிலையினைக் கருத்தில் கொண்டு காணாமல் போன/ துப்பாக்கிச் சூட்டினால் இறக்க நேரிடும் மீனவர்களின் பிள்ளைகள், தொடர்ந்து கல்வி கற்பதற்கான முழுச் செலவினத்தையும் மேற்கொள்ள, தமிழ்நாடு மீனவர் நல வாரியம்

மூலம் ரூ.25 இலட்சம் பிரத்தியேக நிதியினை உருவாக்கிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதன்படி இந்நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2016-17ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### இ. மீன்வள ஆதாரங்கள் / உற்பத்தியை அதிகரித்தல்

### 7.18 மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்

மீன்வளத்தினைப் பாதுகாத்து அதிகரித்திட, மீன்பிடி தடைகாலம் அமலாக்கம் செய்தல், கடலில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல் மற்றும் பல்வகை மாற்று மீன்பிடி முறைகளை மேற்கொள்ளுதல் போன்ற சில வழிமுறைகளை மீன்வளத்துறை செயல்படுத்தி வருகிறது.

### 7.19 செயற்கை மீன் உறைவிடங்கள் (Artificial Reefs) அமைத்தல்

கடலில் மீன் உற்பத்தித்திறனை அதிகரிக்க, செயற்கை மீன் உறைவிடங்கள் உதவுகின்றன. இவை, கடல்வாழ் உயிரினங்களுக்கு வாழ்விடமாகவும் கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கவும், குஞ்சுகள் பாதுகாப்பாக உயிர்வாழவும் வாய்ப்பளிப்பதால் மீன் உற்பத்தி அதிகரிக்கிறது. மேலும், செயற்கை மீன் உறைவிடங்கள், இழுவலைகளைப் பயன்படுத்த தடையாகவும் அமைகின்றன. அண்மைக்கடல்

பகுதியில், மீன்வள பாதுகாப்பு நடவடிக்கையாக, செயற்கை மீன் உறைவிடங்களை அமைப்பதற்காக, அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தமிழக அண்மைக் கடற்பகுதிகளில், இதுவரை 37 இடங்களில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2016-17ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**7.20 மேற்கு கடற்கரை பகுதிகளில் கணவாய் மீன்கள் பிடிக்க ஏதுவாக படகுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட மானியம் அளித்தல்**

தமிழக கடற்கரை முழுவதும் இந்திய கணவாய் மீன்கள் (Squid) கிடைக்கப்பெற்றாலும் கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு கடற்கரையில் இவை மிகுதியான பிடிக்கப்படுகின்றன. மீனவர்கள் கையாளும் மீன்பிடி முறையில், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து ஊக்குவிக்கும் வகையில், கணவாய் மீன்கள் பிடிக்க உபகரணங்கள் வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டத்தினை **2012–13**ம் ஆண்டு இந்த அரசு அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

2016-17ஆம் ஆண்டில் கணவாய் மீன்கள் பிடிக்கும் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.**50** இலட்சம் மானியமாக கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த **200** மீனவர்களுக்கு வழங்கப்படும்.

### 7.21 மீனவர்கள் புதிய சூரைமீன்பிடி தூண்டில் மற்றும் செவுள்வலை விசைப்படகுகளை (Tuna Long Liner Cum Gill Netter) வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்குதல்

கடலோர மீன்வளங்களை பாதுகாப்பதன் மூலம் நிலையான மீன்வளத்தைப் பெருக்கவும், அதிகம் பிடிக்கப்படாத, ஆழ்கடல் மீன்வளங்களான சூரை மீன் மற்றும் அதுபோன்ற மீன் இனங்களை மீனவர்கள் பிடிப்பதை ஊக்கப்படுத்திடவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், நாட்டிலேயே முதன்முறையாக, "தூண்டில் மற்றும் செவுள்வலையுடன் கூடிய புதிய சூரை மீன்பிடி படகுகள் (Tuna Long Liner Cum Gill Netter) கட்டிட 50 விழுக்காடு" மானியம் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தூண்டில் மற்றும் செவுள்வலையுடன் கூடிய புதிய சூரை மீன்பிடி படகு (Tuna Long Liner Cum Gill Netter) கட்டிட, ஒரு படகிற்கு உத்தேசிக்கப்பட்ட மதிப்பான ரூ.60 இலட்சத்தில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

இத்திட்டத்தில் 580 மீனவ பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 171 சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு பயனாளிகளுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 94 படகுகளின் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**30** படகுகளுக்கு ரூ.**2.98** கோடி முதல்நிலை மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

## 7.22 ஆழ்கடல் மீன்பிடிப்பு – தாய்க்கப்பல் நிறுவும் கோட்பாடு

"ஆழ்கடல் மீன்பதனிடும் அலகு மற்றும் தாய்க்கப்பல்" அரசு தனியார் பங்களிப்புடன் நிறுவப்படும் என்ற அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து, இத்திட்டத்தினை செயல்படுத்திட திருவாளர்கள் மகேந்திரா கன்சல்டிங் இன்சீனியர்ஸ் லிமிடெட், சென்னை என்ற நிறுவனம் கலந்தாலோசகராக நியமனம் செய்யப்பட்டது. அந்நிறுவனம் பல்வேறு ஆய்வுகளுக்குப் பின்னர், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கோட்பாடு மற்றும் வழிமுறைகளை அளித்ததனைத் தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்ட கடற்பகுதியில் இத்திட்டத்தினை ஒரு முன்னோடித்திட்டமாக செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டு உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் இரண்டு தாய் கப்பல்களை இயக்கிட தனியார் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த தாய் கப்பலில் மீன்களை பாதுகாக்க, குளிரூட்டப்பட்ட கடல்நீர் மற்றும் குளிரூட்டப்பட்ட மீன் பாதுகாக்கும் அறை போன்ற வசதிகள் இருக்கும். மேலும், இந்த தாய் கப்பலானது, ஆழ்கடலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீன்பிடி விசை படகுகளுக்கு அத்தியாவசியமான இடுபொருட்களை வழங்கும் மையமாக விளங்குவதுடன், அவர்களால் பிடிக்கப்படும் மீன்களைப் பெற்று உடனுக்குடன் கரைக்கு கொண்டு வரும் சேவையினையும்

அளிக்கும். இதனால், மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீன்பிடி படகுகள் கரைக்கு வந்துசெல்லும் செலவை குறைப்பதுடன், பிடிக்கப்படும் மீன்கள் ஏற்றுமதிக்கு உகந்த தரம் வாய்ந்ததாக இருப்பதால் மீனவர்கள் அவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையினையையும் பெறுவர்.

**ஈ. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

**7.23 மத்திய அரசின் நிதியுதவியுடன் மீன்பிடி துறைமுகங்கள் கட்டுமானம்.**

**i) குளச்சல் மீன்பிடி துறைமுகம் (மத்திய–மாநில அரசுகளின் 50:50 விகித பங்களிப்பு திட்டம்)**

கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் மீன்பிடி துறைமுக கட்டுமானப்பணிக்கு மத்திய–மாநில அரசுகளின் நிதிபங்களிப்பு (50:50) திட்டத்தின்கீழ் ரூ.87.75 கோடிக்கு மாநில அரசு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அதனடிப்படையில், அரசு இதுவரை இப்பணிக்கு ரூ.68.44 கோடி நிதியை விடுவித்துள்ளது. (மத்திய அரசு ரூ.24.57 கோடி மற்றும் மாநில அரசு ரூ.43.87 கோடி).

இம்மீன்பிடி துறைமுகத்தில், 540 மீ நீளமுள்ள மேற்கு பிரதானஅலை தடுப்பு சுவர் மற்றும் 230 மீ நீளமுள்ள கிழக்கு துணைஅலை தடுப்பு சுவர் கட்டி முடிக்கப்பட்டு மீனவர்கள் பாதுகாப்பாகவும் சுலபமாகவும் கடலுக்குச் சென்று கரை திரும்ப ஏதுவாக 5.90 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட அமைதியான கடல் நீர்பரப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நீர்பரப்பில் 250 விசை

படகுகளுக்கான அணையும் தளம், படகு இழுவை தளம் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், **100** நாட்டுப்படகுகள் நிறுத்துவதற்கான வழிவகையும் செய்யப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தில் கடற்கரை சார்ந்த **3.80** ஹெக்டேர் நிலப்பரப்பில் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், நிர்வாக அலுவலக கட்டிடம், ரேடியோ தொடர்பு கட்டிடம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், உணவகம், ஓய்வுக்கூடம் ஆகிய பணிகள் முழுமையாக முடிவு பெற்றுள்ளன. துறைமுக மேலாண்மை குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் கூடிய துறைமுகமாக செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ii) **தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுகம் (மத்திய–மாநில அரசுகளின் 50:50 விகித பங்களிப்பு திட்டம்)**

தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுக கட்டுமான பணிக்கு மத்திய–மாநில அரசுகளின் நிதிபங்களிப்பு (50:50) திட்டத்தின் கீழ் ரூ.**97.40** கோடிக்கு மாநில அரசு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அதனடிப்படையில், இதுவரை மத்திய அரசு பங்களிப்பாக ரூ.**33** கோடி நிதியும், மாநில அரசு பங்களிப்பாக ரூ.**48.70** கோடி நிதியும் சேர்த்து, மொத்தம் ரூ.**81.70** கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்துறைமுகத்தில் **630** மீ நீளமுள்ள மேற்கு பிரதான அலைத்தடுப்பு சுவரும், **120** மீ நீளமுள்ள கிழக்கு துணை

அலைத்தடுப்பு சுவரும் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு மீனவர்கள் பாதுகாப்பாகவும் சுலபமாகவும் கடலுக்குச் சென்று கரை திரும்ப ஏதுவாக **16.56** ஹெக்டேர் பரப்பளவு கொண்ட அமைதியான கடல் நீர்பரப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நீர்பரப்பில் **750** படகுகளுக்கான இரு படகு அணையும் தளங்கள் கட்டும்பணி முன்னேற்றத்தில் உள்ளது. இத்துறைமுகத்தில் கடற்கரை சார்ந்த **16.19** ஹெக்டேர் நிலப்பரப்பில் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், நிர்வாக கட்டிடம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், உணவகம், ஓய்வுக்கூடம் சார்ந்த பணிகள் துவங்கப்பட உள்ளன.

கடலரிப்பினை தடுப்பது தொடர்பாக **13**வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தின் கிழக்கு பகுதியில் உள்ள மீனவ கிராமங்களில் கடல் அரிப்பு தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக ரூ.**82.73** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

iii) **பூம்புகார் மீன்பிடி துறைமுகம் (மத்திய – மாநில அரசுகளின் 75:25 மற்றும் 50:50 விகித பங்களிப்பு திட்டம்)**

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மத்திய மாநில அரசின் நிதிபங்களிப்பு (75:25) திட்டத்தின்கீழ் ரூ.78.50 கோடி மதிப்பில் மீன்பிடி துறைமுகம் அமைக்க மாநில அரசு நிர்வாக ஒப்புதல் அளித்தது. அதன் பின்னர், ரூ.**148** கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியது இதன்படி மத்திய–மாநில அரசுகள்

ரூ.78.50 கோடிக்கு 75:25 பங்களிப்பு விகிதத்திலும், மீதமுள்ள தொகையான ரூ.69.50 கோடி 50:50 விகித பங்களிப்புடன் ஒப்புதல் அளித்தன. அதனடிப்படையில், மத்திய அரசு பங்களிப்பாக ரூ.23 கோடியும், மாநில அரசு பங்களிப்பாக ரூ.54.38 கோடியும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.77.38 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

திருத்திய வடிவமைப்பின்படி, தெற்கு பிரதான அலை தடுப்பு சுவர் பணியில் மொத்தமுள்ள 1100 மீ நீளத்தில் 880 மீ நீளத்திற்கும், வடக்கு துணை அலை தடுப்பு சுவர் முழுமையாக 390 மீ நீளத்திற்கும் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், வடக்கு மற்றும் தெற்கு அலை தடுப்புச்சுவர் பணிகளில் 'டெட்ராபாட்'('Tetropods') எனப்படும் கான்கீரிட் கற்கள் அடுக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. 350 படகுகளுக்கான படகு அணையும் தளம் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. கடற்கரை சார்ந்த 16.52 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், நிர்வாக கட்டிடம், உணவகம், ஓய்வுக்கூடம் சார்ந்த பணிகள் துவங்கப்பட உள்ளன. மத்திய அரசின் பங்களிப்பு முழுமையாக பெறப்பட்டவுடன் இந்நிதியாண்டில் பணிகள் முடிக்கப்படும்.

**iv) சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம் விரிவாக்கம் செய்தல் (மத்திய – மாநில அரசுகளின் 75:25 விகித பங்களிப்பு திட்டம்):**

கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன்பிடி துறைமுக கட்டுமான பணிக்கு மத்திய–மாநில அரசுகளின் நிதி பங்களிப்பு (75:25) திட்டத்தின்கீழ் ரூ.73.52 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு இதுவரை இப்பணிக்கு ரூ.45.47 கோடி விடுவிக்கப்பட்டுள்ளன. (மத்திய அரசு பங்கு ரூ.27.09 கோடி மற்றும் மாநில அரசு பங்கு ரூ.18.38 கோடி).

சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில், 405 மீ நீளமுள்ள மேற்கு பிரதான அலை தடுப்பு சுவர், 100 மீ நீளமுள்ள கிழக்கு அலைத்தடுப்பு சுவர் மற்றும் 350 படகுகளுக்கான படகு அணையும் தளம் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டு மீனவர்கள் பாதுகாப்பாகவும் சுலபமாகவும் கடலுக்குச் சென்று கரை திரும்ப ஏதுவாக 32 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட அமைதியான கடல் நீர்பரப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தில் கடற்கரை சார்ந்த 8.89 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், நிர்வாக அலுவலக கட்டிடம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், உணவகம் சார்ந்த பணிகள் முழுமையாக முடிவு பெற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

v) **இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மூக்கையூர் மீன்பிடி துறைமுகம் மறு கட்டமைப்பு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இராமேஸ்வரம் பகுதியில் பாக் ஜலசந்தியில் மீன்பிடி விசைப்படகுகளின் நெரிசலை குறைக்கவும், இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் மற்றும் அதன் அருகில் உள்ள கிராம மீனவர்களின் மீன்பிடித் தொழில் மூலம் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், மூக்கையூரில் அலை தடுப்பு சுவர், படகு அணையும் தளம், தடுப்புச்சுவர், ஏலக்கூடம், மீன் உலர்களம், வலை பின்னும் கூடம் மற்றும் இதர கட்டுமான வசதிகளுடன் கூடிய மீன்பிடி துறைமுகத்தை அமைக்க மத்திய மாநில அரசின் பங்களிப்புடன் இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்ததன் தொடர்ச்சியாக மத்திய அரசின் திட்ட ஒப்பளிப்பு குழு ரூ.113.90 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்திற்கு 50 விழுக்காடு மத்திய அரசின் பங்களிப்புடன் ஒப்புதல் வழங்கியுள்ளது. மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

7.24 **அரசு–தனியார் (Public – Private Partnership (PPP)) பங்களிப்பு முறையில் கட்டப்படும் மீன்பிடி துறைமுகம்**

**அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணக்குடி மீன்பிடி துறைமுகம் கட்டுதல்**

கன்னியாகுமரி மாவட்டம் மணக்குடியில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கு அரசு

ஆணை வழங்கியுள்ளது. தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்து தனியார் பங்களிப்பாளரை தேர்வு செய்வதற்கு பரிவர்த்தனை சேவை வழங்கும் ஆலோசகராக திருவாளர்கள் "வாப்காஸ் (Water and Power Consultancy Services-WAPCOS) லிமிடெட்" என்ற நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. மணக்குடியில் ரூ.72.44 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கு தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது. ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மீன்பிடி துறைமுகம் அமைத்திட உரிய அனுமதி ஆணை தகுதியுள்ள ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 7.25. உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் கடலோர பேரிடர் இடர் குறைப்பு திட்டப் பணிகள் (Coastal Disaster Risk Reduction Project)

மீன்பிடி தொழிலும் மீனவர் சமுதாயமும் இயற்கை இடர்பாடுகள், பருவகால மாற்றம் மற்றும் அழிந்துவரும் கடல் சுற்றுப்புற சூழல் ஆகியவற்றால் அதிகபாதிப்புக்கு உள்ளாகும் நிலை உள்ளது.

கடல் மீன்வளத்தை மேம்படுத்தவும், மீனவர்கள் பாதுகாப்பை உறுதி செய்யவும், உலக வங்கி நிதி உதவியுடன் கடலோர பேரிடர் இடர் குறைப்புத் திட்டத்தின் – (CDRRP) கீழ்

பின்வரும் திட்டங்களை செயல்படுத்திட, அரசு **ரூ.321.30** கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**அட்டவணை: 8**

**உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் கடலோர பேரிடர் இடர் குறைப்பு திட்டப்பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி விவரம்**

| I. | **மீன்வள உட்கட்டமைப்பு:** | **தொகை (ரூ. கோடியில்)** |
|---|---|---|
| அ) | அவசர கால சுனாமி மறுசீரமைப்பு திட்ட பணிகள் | ரூ.132.30 |
| ஆ) | புதிய பணிகள் (2 திட்டங்கள்) | ரூ.78 |
| இ) | புதிய திட்டங்களுக்கான ஆய்வு | ரூ.10 |
| | **மொத்தம்** | ரூ.**220.30** |
| II. | **நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம்** | ரூ.38.86 |
| III. | கம்பியில்லா தொலைத்தொடர்பு வசதிகள் வழங்குதல் | ரூ.62.14 |
| | **நிகர மொத்தம்** | ரூ.**321.30** |

### 7.26.1 **மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகள் (ரூ.220.30 கோடி)**

இத்திட்டத்தில் முன்னதாக அவசர கால சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்தில் நடைபெற்று கொண்டிருக்கும் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற உதவிடும் வகையில் இந்த நிதியுதவி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. ஒப்பளிக்கப்பட்ட பணிகளின் விவரம் கீழ்கண்டவாறு.

## அட்டவணை:9
## சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட பணிகள் விவரம்

| வ. எண். | பணிகளின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | நிறைவேற்றப்பட்ட முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகள் |
|---|---|---|---|
| **I) மீன்பிடி துறைமுகங்கள்விரிவாக்குதல்** | | | |
| 1. | நாகப்பட்டினம் | 45.21 | கடுவையாற்றின் வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் படகு அணையும் சுவர், தடுப்பு சுவர், ஏலக்கூடம், வலைபின்னும் கூடம் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்து. |
| 2. | பழையார் | 32.22 | படகு அணையும் சுவர், அலைதடுப்பு கருங்கல் சுவர், அணுகுசாலை மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்து. |
| **II) ஆற்று முகத்துவாரங்களை நிரந்தரமாக நிலைப்படுத்துதல்** | | | |
| 1. | உப்பனார் | 8.03 | திருமுல்லைவாசல், உப்பனார் ஆற்று முகத்துவாரம் தூர்வாரப்பட்டு கரை சுவர் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.. |
| 2. | வெள்ளார் | 14.45 | வெள்ளாறு ஆற்றுமுகத்துவாரம் தூர்வாரப்பட்டு கரை சுவர் அமைக்கப்பட்டுள்ளது. |
| **III) மீன்இறங்குதளங்கள் கட்டுதல்** | | | |
| 1. | நாகூர் | 12.99 | படகு அணையும் சுவர், அடிப்படை வசதிகளுக்கான கட்டுமானப் பணிகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.07.2015 அன்று திறந்துவைக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 2. | பரங்கிபேட்டை– அன்னங்கோயில் | 18.91 | படகு அணையும் சுவர், தூர்வாரும் பணி மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.06.2014 அன்று திறந்துவைக்கப்பட்டது. |
| IV) | குழாய் பனிக்கட்டி நிலையம் கட்டுதல் | | |
| 1. | சின்னமுட்டம் | 0.50 | ஏலக்கூடத்தில் அமைக்கப்பட்ட குளிர்பதன அறையுடன் கூடிய குழாய் பனிக்கட்டி நிலையம் அமைக்கப்பட்டு தமிழ்நாடு மாநில தலைமை மீனவ கூட்டுறவு இணையத்திடம் (TAFCOFED) இயக்கிட ஒப்படைக்கப்பட்டது. |

**V) தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தை நவீனப்படுத்துதல்**

கடலோர பேரிடர் இடர் குறைப்புத் திட்டத்தின் (CDRRP) கீழ் மல்லிப்பட்டினத்தில் மீன்பிடி துறைமுகத்தை ரூ.60 கோடி மதிப்பில் நவீனப்படுத்தி மறுசீரமைக்க அரசு முனைந்துள்ளது. இத்திட்டத்தில் “L” வடிவ பாலம் அமைத்தல், படகு அணையும் சுவர் கட்டுதல், வலை பின்னும் கூடம் கட்டுதல், மீன் ஏலக்கூடம், மண் தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை, சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டறிக்கை மற்றும் சமுதாய பாதிப்பு குறித்து ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தத் தேவைப்படும் அனுமதிகள் பெறும் பணி, கலந்தாலோசகரால் (Consultant) மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### VI) தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயலில் ஆற்றுமுகத் துவாரத்தை நிலைப்படுத்துதல்

தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயலில் மீன்பிடி படகுகள் பாதுகாப்பாக கடலுக்குள் செல்ல ஏதுவாக ரூ.18 கோடி திட்ட மதிப்பீட்டில் ஆற்று முகத்துவாரத்தை நிலைப்படுத்த அரசு முனைந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், கல் சுவர் அமைத்தல், மண் தூர்வாருதல், படகு அணையும் சுவர் கட்டுதல், அணுகு சாலை அமைத்தல் மற்றும் இதர கட்டிடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு உலக வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

### VII) புதிய மீன்பிடி துறைமுகம் அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளுதல்

கடலோர பேரிடர் இடர் குறைப்பு திட்டத்தின் (CDRRP) கீழ், 8 புதிய மீன்பிடி துறைமுகங்கள் கட்டுவதற்குத் தேவைப்படும் தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான அத்தியாவசிய ஆய்வுகளை மேற்கொள்ள ரூ.10 கோடி நிதியை உலக வங்கி ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தின் நான்கு பணிகளுக்கு ஆய்வுகள் மேற்கொள்ள கலந்தாலோசனை நிறுவனம் நியமனம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதர நான்கு

மீன்பிடி துறைமுகங்களுக்கு இடம் தேர்வு செய்தல் விரைவில் முடிவு செய்யப்படும்.

**7.26.2 நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் – II (Fisheries Management for Sustainable Livelihood (FIMSUL-II)) (ரூ.101 கோடி)**

கடலோர மீனவ சமுதாயம் இயற்கை சீற்றங்களினால் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படக்கூடியதாகவும் சில சமயங்களில் அவர்களது உயிருக்கே ஆபத்து ஏற்படும் சூழ்நிலையும் உருவாகிறது.

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கடலோர பேரிடர் இடர் குறைப்புத் திட்டம் (CDRRP) – நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டத்தின் கீழ் (FIMSUL-II) கீழ்க்காணும் உப திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

அ. கடல் மீன்வள கூட்டு மேலாண்மை (ரூ.23.03 கோடி)

ஆ.அறிவுசார் மேலாண்மை திறன் மேம்படுத்துதல் (ரூ.5 கோடி)

இ. மீன்வள வாழ்வாதாரத்திற்கு உதவியளித்தல் (ரூ.6.85 கோடி)

ஈ). திட்ட மேலாண்மை உதவி (ரூ.3.98 கோடி)

உ.) கடல் மீன்பிடிப்பில் மீனவர்களது பாதுகாப்பினை உறுதி செய்திட கம்பியில்லா தொலைதொடர்பு வசதியளித்தல் (ரூ.62.14 கோடி)

**அ) கடல் மீன்வள கூட்டு மேலாண்மை ( Marine Fisheries Co-Manangement)** (ரூ.23.03 கோடி)

இந்த உபதிட்டத்தின் கீழ் பின்வரும் பல்வேறு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன.

- கடல் மீன்வளத்தினை சார்ந்து வாழும் பல்வேறு பங்கீட்டாளர்களுக்கு நியாயமான மீன்வள பங்கீடு கிடைப்பதை உறுதி செய்வதற்கும், சிறந்த முறையில் கடல் மீன்வளத்தை மேலாண்மை செய்வதற்கும், தமிழ்நாட்டில் 13 கடலோர மாவட்டங்களில் கிராம, மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான கூட்டு மேலாண்மைக்குழுக்கள் உருவாக்கப்படும்.

- மீன்வள மேலாண்மை குழுக்கள் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை திறம்பட செயல்படுத்திட வழிகாட்டுவதற்காக மத்திய மீன்வள ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு மீன்வள பல்கலை கழகத்தில் உள்ள வல்லுநர்களைக் கொண்ட ஒரு மாநில அளவிலான தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் தனியாக மீன்வளப் பங்கீட்டாளர்களைக் கொண்ட மேலாண்மை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவானது, சம்பந்தப்பட்ட

மீன்பிடித் துறைமுகம் / மீன்பிடி இறங்குதள உட்கட்டமைப்புகளை அன்றாடம் சுகாதாரமான முறையில் பராமரிக்கத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்கி அந்த நிதியிலிருந்து சிறப்பாக இக்கட்டமைப்பு வசதிகளைப் பராமரிக்கவும் பல்வேறு வழிமுறைகளை கையாளுதல் மூலம் சுகாதாரத்தை மேம்படுத்திடவும், மீனின் தரத்தினை உறுதி செய்திடவும் ஏற்ற வழிகளை ஆராய்ந்து உரிய தீர்மானங்கள் நிறைவேற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

- மீன்வளத் தகவல் மற்றும் சேவை மையங்கள் சென்னை, கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களில் அமைத்திட ரூ.1.20 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இம்மையங்கள் ஒற்றைச்சாளர தகவல் மையமாக செயல்படுவதன் மூலமாக மீன்பிடிப்பு தொடர்பான தகவல்கள் திரட்டுதல், மீன்வளம் நிறைந்த பகுதி குறித்தான தகவல் அளித்தல், அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வானிலை எச்சரிக்கையை மீனவர்களுக்கு தெரிவித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

- பாரம்பரிய மீன்பிடி கலன்களில் மீனவர்கள், கடலில் மீன்பிடிப்பில் ஈடுபடும்போது, இயற்கையின்

ஆபத்துக்களை சந்திக்க நேரிடும் நிகழ்வுகளில், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்திட கடலோர மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடிகலனுக்கும், தலா இரண்டு உயிர் காப்பு மிதவைகள் வீதம் முதற்கட்டமாக **11,500** உயிர்காப்பு மிதவைகள் (Life buoys) நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த பாரம்பரிய மீனவர்களுக்கு ரூ.**1.62** கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இரண்டாம் கட்டமாக தற்போது **38,000** உயிர்காப்பு மிதவைகள் (Life buoys) மீதமுள்ள மாவட்டங்களில் உள்ள பாரம்பரிய மீன்பிடி படகுகளுக்கு வழங்கப்படும்.

- ஒவ்வொரு கடலோர மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும் கூட்டு மேலாண்மை குழுவினர் மீன்வளம் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கும், அரசின் திட்டங்களை உருவாக்குவதற்கும் உதவியாக, மீன்பிடிப்பு மற்றும் மீன்வளப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்படுகிறது. இப்பணிக்காக புள்ளி விபர உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு புள்ளி விவரசேகரிப்பு பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்கு, மொத்தம் ரூ.**51.84** இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- கடலோர மீனவர்களின் நலனுக்காக கடல் மீன்வள மேலாண்மையை மேம்படுத்திடவும் கடலோர மீனவர்களின் நலனுக்காகவும் மீன்வளம் சார்ந்த பிரத்யேக ஆய்வுகள் ரூ.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாட்டிலுள்ள மீன்பிடி துறைமுகங்கள் / மீன்பிடி இறங்குதளங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் மற்றும் இறங்குதளம் சார்ந்த பங்களிப்பாளர்களுக்கு, மீன்பிடி துறைமுக/இறங்குதள மேலாண்மை, சுகாதாரமான முறையில் பராமரிப்பது, சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுதல், கடலில் பாதுகாப்பு முறைகள், கூண்டுகளில் மீன்வளர்த்தல், கடற்பாசி வளர்த்தல், கூட்டுறவு நிர்வாகம், மேலாண்மை, தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கிட ரூ.75 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- மீன்பிடி துறைமுகங்கள் / மீன்பிடி இறங்குதளங்கள் ஆகியவற்றின் அன்றாட செயல்பாடு மற்றும் தொடர்ந்து சுத்தமாக வைத்திருக்கவும், பராமரிப்பினை மேற்கொண்டு ஊக்குவிக்கும் விதமாக அவற்றினை நிர்வகிக்கும் மேலாண்மை குழுக்களுக்கு முதலாம் ஆண்டு செலவினத்தில் 75 விழுக்காடு, இரண்டாம் ஆண்டு

செலவினத்தில் **60** விழுக்காடு ஈடு செய்வதற்காக உலக வங்கி ரூ.**2.89** கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**ஆ. அறிவுசார் மேலாண்மை திறனை மேம்படுத்துதல் (ரூ.5 கோடி)**

இத்திட்டத்தின் கீழ், பயிற்சிகள் மற்றும் திறன்மேம்பாடு மூலம் மீன்வளத்துறை அலுவலர்களுக்கு மீன்வள வாழ்வாதார திட்டங்கள் மற்றும் கூட்டுமேலாண்மை ஆகியவற்றில் உரிய பயிற்சிகள் வழங்கிட அயல்நாட்டிற்கு அனுப்புவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீன்வளத்துறை ஆணையர் அலுவலகத்தில் மைய நூலகம் மற்றும் மென்பொருள் புள்ளிவிவர தொகுப்பு மையம் (Meta Data Centre) அமைக்கப்படும்.

**இ. மீன்வள வாழ்வாதாரத்திற்கு உதவியளித்தல் (ரூ.6.85 கோடி)**

மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மீன்வளம் சார்ந்த மற்றும் மீன்வளம் சாராத வாழ்வாதாரத்தை உயர்த்தும் உதவிகளை செய்தல் இப்பிரிவின் முக்கிய நோக்கமாகும். மீனவர்களுக்கு குறிப்பிட்ட வாழ்வாதார திட்டங்களில் திறன் வளர்த்தல், கூண்டுகளில் மீன்வளர்ப்பு, கடற்பாசி வளர்த்தல், மதிப்புகூட்டப்பட்ட மீன்உணவு தயாரித்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கடலோர பகுதிகளில் **10** இடங்களில் **100** விழுக்காடு மானியத்துடன் கடலில் மிதவை கூண்டு மீன்வளர்ப்பு நடவடிக்கைகள் மீனவர்களால் தொடங்கப்பட்டுள்ளன.

கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவ விதவை பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்யும் வகையில் 12 நவீன மீன் விற்பனை நிலையங்கள் ரூ.55 இலட்சம் செலவில் காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டு அதனை நடத்துவதற்கு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**ஈ. மேலாண்மை உதவி (ரூ.3.98 கோடி)**

திட்டங்களை செவ்வனே செயல்படுத்திடவும், அதன் முன்னேற்றத்தினை கண்காணிக்கும் பொருட்டும் தனியாக ஒரு திட்ட கண்காணிப்பு மற்றும் செயல்பாட்டு குழு அமைக்க அரசு இந்த உபதிட்டத்தின்கீழ் ரூ.3.98 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**உ. கடல் மீனவர்களது பாதுகாப்பிற்கு கம்பியில்லா தொலைதொடர்பு வசதியளித்தல் (ரூ.62.14 கோடி)**

கடலில் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் மீனவர்களின் பாதுகாப்பினை தொடர்ந்து உறுதிபடுத்தவும், வானிலை அறிக்கை மற்றும் மீன்வள ஆதார இடங்களைத் தொடர்ந்து தெரிந்து கொள்ளவும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மீன்பிடி கலன்களுக்கும் கம்பியில்லா தொலைத்தொடர்பு வசதிகள் (VHF) வழங்கிட ரூ.62.14 கோடி நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கம்பியில்லா தொலைத்தொடர்பு அமைப்பினை ஏற்படுத்திட

மாவட்டங்களில் தொலைதொடர்பு கோபுரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கவும், மீனவர்களுக்கு வழங்கிட தொலைதொடர்பு கருவிகள் (VHF sets) கொள்முதல் செய்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7.27 சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தில் மீன் இறங்குதளங்கள் கட்டுதல் (TRP)

தமிழகத்தில் பல்வேறு கடலோர கிராமங்களில் பத்து புதிய மீன் இறங்குதளங்கள் கட்ட, அரசு ரூ.**49.97** கோடி ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில், அண்ணாமலைச்சேரி மற்றும் பெரியமாங்கோடு தவிர அனைத்து இடங்களிலும் மீன் இறங்குதளங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. அண்ணாமலைச்சேரி மற்றும் பெரியமாங்கோடு மீன் இறங்கு தளங்கள் கட்டுவதற்கான இடத்தினை வனத்துறையிடமிருந்து தேவையான அனுமதி பெற்றவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 7. 28 நபார்டு திட்டங்கள்

### அ. **2014–15** (RIDF XX)

**2014–15**ஆம் ஆண்டில் **9** இடங்களில் மீன் இறங்கு தளம் அமைப்பதற்கும், **4** இடங்களில் மீன் பண்ணைகளை மேம்படுத்தவும், நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் ரூ.**79.40** கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட பணிகளின் விவரம் கீழ்கண்டவாறு.

## அட்டவணை:10

## நபார்டு (NABARD –RIDF XX) கீழ் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்

| வ. எண். | பணியின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| **I) மீன் இறங்குதளங்கள் அமைத்தல்** | | | |
| 1. | இராமநாதபுரம் மாவட்டம் (தனுஷ்கோடி, டி.மாரியூர், பாம்பன், முகுந்தராயர்சத்திரம், தங்கச்சிமடம் மற்றும் வேதாளை) | 44.70 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 2. | கன்னியாகுமரி மாவட்டம் (தூத்தூர் மற்றும் இரையுமன்துரை) | 12.15 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 3. | கோவளம், காஞ்சிபுரம் மாவட்டம் | 5.00 | கடலரிப்பு தடுப்பிற்கான பணிகள் முடிவடைந்தவுடன் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். |
| **II) மீன்குஞ்சு பண்ணைகள் மேம்படுத்துதல்** | | | |
| 1. | பவானிசாகர், பரங்கிபேட்டை, வைகைஅணை, கொடைக்கானல் | 17.55 | பவானிசாகர் மற்றும் பரங்கிபேட்டை ஆகிய இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. வைகை அணையில் பணி முன்னேற்றத்தில் உள்ளது. கொடைக்கானலில் உரிய அனுமதிகள் பெறப்பட்டவுடன் பணி துவங்கப்படவுள்ளது. |

ஆ) **2015–16** (RIDF XXI)

**2015–16**ஆம் ஆண்டில் 5 இடங்களில் மீன் இறங்கு தளம் அமைப்பதற்கும் 10 இடங்களில் மீன் பண்ணைகளை மேம்படுத்தவும் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கோவளம் கடற்கரை கடலரிப்பு தடுப்பு சுவர் அமைக்கும் பணிகளுக்காகவும் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் ரூ.68.30 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட பணிகளின் விவரம் கீழ்கண்டவாறு.

அட்டவணை:11

**நபார்டு (NABARD –RIDF XXI) கீழ் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள் (2015–16)**

| வ. எண். | பணியின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| I) மீன் இறங்குதளங்கள் அமைத்தல் | | | |
| 1. | கடலூர் மாவட்டம் பேட்டோடை, தூத்துக்குடி மாவட்டம் சிங்கித்துறை, பழையக்காயல், நாகப்பட்டினம் மாவட்டம் சாமந்தன்பேட்டை, திருமுல்லைவாசல் | 25.00 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது |
| II) மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகள் மேம்படுத்துதல் | | | |
| 1. | திருவள்ளூர் மாவட்டம் பூண்டி, கரூர் மாவட்டம் குளித்தலை மற்றும் திருக்காம்புலியூர், தருமபுரி மாவட்டம் சின்னார், கிருஷ்ணகிரி மாவட்டம் பாம்பார், தஞ்சாவூர் மாவட்டம் தட்டான்குளம், திண்டுக்கல் மாவட்டம் அணைப்பட்டி, சிவகங்கை | 25.00 | இப்பணிகளில் மானகிரி தவிர அனைத்து இடங்களிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மானகிரி மீன்பண்ணைக்கு பதிலாக காஞ்சிபுரம் மாவட்டம் ஆத்தூர் மீன்பண்ணை தேர்வு செய்யப்படவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்டம் பிரவலூர் மற்றும் மானகிரி, திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு | | |
| **III) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கோவளம் கடற்கரை கடலரிப்பு தடுப்பு அமைக்கும் பணி** | | | |
| 1. | கோவளம், காஞ்சிபுரம் மாவட்டம் | 18.30 | இப்பணிக்கு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது. மாநில அளவிலான கடற்கரை ஒழுங்குமுறை மேலாண்மை ஆணையத்தின் ஒப்புதல் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. |

## 7.29 இதர திட்டங்கள்

### i) மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ள தனிநிதி உருவாக்குதல்

தமிழகத்தில் புதிய மீன்பிடி துறைமுகங்கள் / மீன் இறங்கு தளங்கள் அமைக்க மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளவும், தொழில் நுட்ப–பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிக்கவும், ரூ.2 கோடியில் தனிநிதி (Corpus fund) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்கீழ் நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கு மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

### ii) திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தை கல் சுவர் அமைத்து நிரந்தரமாக நிலைப்படுத்த ஆய்வு மேற்கொள்ளுதல்

பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தை கல் சுவர் அமைத்து நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிக்கு ரூ.40 இலட்சம் செலவில்

ஆய்வு மேற்கொள்ளவும், தொழில் நுட்ப–பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கவும், தமிழக அரசு நிர்வாக ஒப்புதலும், நிதியும் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை IIT, சென்னையால் தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

Environment Impact Assessment (EIA) அறிக்கை தயாரிக்க, கலந்தாலோசகரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**iii) மீன்வளத் துறைக்கு நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரத்தில் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், **04.08.2014** அன்று சட்டப்பேரவையில் விதி **110**ன் கீழ், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் ரூ.**3.60** கோடி மொத்தச் செலவில் ஒருங்கிணைந்த மீன்வளத்துறை நிர்வாக அலுவலகக் கட்டிடங்கள் கட்டப்படும் என அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரத்தில், தலா ரூ.**1.80** கோடி செலவில் ஒருங்கிணைந்த அலுவலக கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. கட்டடக்கலை வடிவமைப்பாளரின் வரைபடத்தின்படி ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்கள் நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**iv). கொடைக்கானலில் அலுவலக கட்டடம் கட்டுதல்**

**2014–15**ம் ஆண்டில், பகுதி II திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில், மீன்துறை சார் ஆய்வாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ரூ.**15** இலட்சம் ஒப்பளித்தது. மலைப்பகுதி பாதுகாப்பு ஆணையத்தின் (Hill Area Conservation Authority) ஒப்புதலைப் பெற்றவுடன் கட்டுமானப்பணி தொடரப்படும்.

**v) எண்ணூர் மற்றும் வெள்ளப்பள்ளத்தில் புதிய மீன்பிடி துறைமுகம் கட்டுதல் மற்றும் கடலூர் முதுநகரில்** (Cuddalore Old Town) **உள்ள மீன்பிடி துறைமுகத்தை சீரமைத்தல் பணிகளுக்கு ரூ.4 கோடி செலவில் ஆய்வுப்பணி மேற்கொள்ளுதல்**

திருவள்ளூர் மாவட்டம் எண்ணூரில் சூரை மீன்பிடிப்பதற்கான மீன்பிடித் துறைமுகம் , நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளத்தில் மீன்பிடி துறைமுகம், கடலூர் மாவட்டம் கடலூர் முதுநகரில் (Cuddalore Old Town) உள்ள மீன்பிடி துறைமுகத்தை சீரமைத்தல் ஆகிய திட்டங்களுக்கான ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது.

## 7.30 கூடங்குளம் அணுமின் நிலையம் அருகாமையிலுள்ள கிராமங்களின் அபிவிருத்தித் திட்டம்

கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் நிலைய திட்டத்தின் ஒரு பகுதியாக அதற்கு அருகாமையிலுள்ள கிராமங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக ரூ.500 கோடி செலவில் செயல்படுத்தப்படும் திட்டத்தில் மீனவர்கள் பயனுறும் வகையில் கடலோர உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்காக ரூ.92 கோடி நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- உவரியில் ரூ.5 கோடி செலவில் குளிர்சாதன அறை மற்றும் நவீன மீன் விற்பனை நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- உவரி மீனவர் கிராமத்தில் மீன் இறங்கு தளம் அமைக்க ரூ.66.70 கோடி மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.
- பெருமணல் மற்றும் கூத்தங்குழி ஆகிய இரண்டு கிராமங்களிலும் ரூ.20 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவுகள் அமைக்கும் பணி (தலா ரூ.10 கோடி) முடிக்கப்பட்டுள்ளது.
- கூட்டப்பனை கிராமத்தில், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் வலைபின்னும் கூடம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

## 7.31 தமிழ்நாட்டில் மீன்பதனிடும் பூங்காக்கள் அமைத்தல்

கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், மீன்பதனிடும் பூங்காக்கள் அமைத்திட தகுந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில் மீன்பதனிடும் பூங்காங்கள் அமைத்திட ஏதுவாக, தனியார் பங்களிப்பாளர்களுக்கு நீண்ட கால குத்தகை முறையில் இடம் ஒதுக்கீடு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில், கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன்பதனிடும் பூங்கா அமைத்திட நிலம் ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், திருவள்ளூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைத்திட தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (SIPCOT) தனியார் பங்களிப்பாளர்களுக்கு இடம் ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டு, அவற்றிற்கு பல்வேறு துறைகளிடம் இருந்து ஒப்புதல் பெறும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 7.32 மாமல்லபுரத்தில் உலகத்தரம் வாய்ந்த கடற்காட்சியகம் (Oceanarium) நிறுவுதல்

சென்னைக்கு அருகே மாமல்லபுரத்தில் ரூ.258 கோடி செலவில் உலகத்தரம் வாய்ந்த கடற்காட்சியகம் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் நிறுவிட, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி

கழகத்திற்குச் சொந்தமான **13.07** ஏக்கர் பரப்பிலான தகுதியான இடம் தேர்வு செய்யப்பட்டு, செய்யத்தக்கமைக்கான ஆய்வினை (Feasibility study) மேற்கொள்ளவும், பரிவர்த்தனை ஆலோசனை சேவையை (Transaction Advisory Services) வழங்கிடவும் "திருவாளர்கள் தாராசா லிமிடெட், மும்பை " (M/s Darashaw Private Limited, Mumbai) என்ற நிறுவனம் கலந்தாலோசகராக நியமனம் செய்யப்பட்டு, பல்வேறு ஆராய்வுகளுக்குப் பின் விரிவான கோட்பாடு (Detailed Concept) மற்றும் தொடர்புடைய பொழுது போக்கு வசதிகள் போன்றவைகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினை செயல்படுத்திட, தகுதி பெறுவதற்கான வேண்டுகோள் RFQ (Request For Qualification) பெற்றிட உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

### 7.33 சென்னை, சேத்துப்பட்டு ஏரியினை புனரமைத்து பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமை பூங்கா அமைத்தல்

சென்னை சேத்துப்பட்டு ஏரியில், ரூ.**42** கோடி செலவில் "பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமை பூங்கா" **27.02.2016** அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொது மக்களுக்காக தொடங்கி வைக்கப்பட்டது. இப்பசுமை பூங்காவில், படகு குழாம், தூண்டில் மேடை, பல அடுக்கு வாகன நிறுத்தம், பூங்கா, பொழுது போக்கு மையம், உணவகம்,

நடை மற்றும் தொடர் ஓட்டப்பாதை, சிறுவர் விளையாட்டு பகுதி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள இந்த பசுமை பூங்கா பொதுமக்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்றுள்ளதோடு, மழை நீரை சேகரித்து அந்தப் பகுதியின் நிலத்தடி நீரினை செறிவூட்டவும் உதவுகிறது.

### 7.34 மீன்சந்தைகளை நவீனப் படுத்துதல்

சுகாதாரமான மற்றும் நல்ல தரமான மீன்களை நுகர்வோருக்கு வழங்குவதில், மீன் சந்தைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் பெரும்பாலான மீன்சந்தைகள் உள்ளாட்சி அமைப்புகள்/ மீனவர் கூட்டுறவு சங்கங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த மீன் சந்தைகளை, குளிர்காப்பு மற்றும் நவீன வசதிகளுடன் மேம்படுத்துவதன் மூலம், மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையைப் பெற்றிடவும், பொது மக்களுக்கு தரமான மீன்களை வழங்கிடவும் வாய்ப்பாக அமையும். 2015–16 ஆம் ஆண்டில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் தமிழ் நாட்டிலுள்ள 23 மீன்சந்தைகளை நவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் 20 மீன்சந்தைகளை நவீனப்படுத்த திட்ட மதிப்பீட்டில் 40 விழுக்காடு நிதியுதவி வழங்க நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

உள்ளாட்சி அமைப்புகள்/ மீனவர் கூட்டுறவு சங்கங்களின் நிதி நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காகத் தேவைப்படும் மீதமுள்ள 60 விழுக்காட்டு தொகையில், 50 விழுக்காடு தொகையை, நிதி உதவியாக அரசு வழங்கிடும். மீதமுள்ள 10 விழுக்காடு தொகையை அந்தந்த நகராட்சிகள்/ மீனவர் கூட்டுறவு சங்கங்கள் அவர்களது சொந்த நிதியிலிருந்து செலவிட வேண்டும். இத்திட்டப்பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

## 8. உள்நாட்டு மீன்வளம்

உள்நாட்டு மீன்வளப் பிரிவில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, மீன் உற்பத்தியைப் பெருக்குவதிலும், உணவு பாதுகாப்பை உறுதி செய்வதிலும் மற்றும் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியிலும் முக்கிய பங்கினை வகிக்கிறது. மீன் உற்பத்தியை கூட்டின மீன்வளர்ப்பு உட்பட, பாரம்பரிய முறையில் கெண்டை மீன் வளர்ப்பதற்கு 8 முதல் 12 மாதங்கள் நீர் இருத்தல் அவசியம். ஆனால், தமிழ் நாட்டில் உள்ள பெரும்பாலான நீர் நிலைகளில், சராசரியாக 4 முதல் 5 மாதங்களுக்கு மட்டுமே நீர் இருப்பு உள்ளதால், பாரம்பரிய கெண்டை மீன் வளர்ப்பு மேற்கொள்வதில் சிரமங்கள் உள்ளன. இத்தகைய இயற்கை இடர்பாடுகளை எதிர்கொண்டு மீன் உற்பத்தியினை அதிகரிக்க, மீள்வளத்துறை கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

- சுற்றுச்சூழலுக்குகந்த வளங்குன்றா மீன் வளர்ப்பு / இறால் வளர்ப்பினை மேற்கொள்ளுதல்.
- நீர்நிலைகளில் மிதவை கூண்டுகளில் மீன்குஞ்சுகள் வளர்த்தெடுக்கும் முறையை அறிமுகப்படுத்துதல்.
- நீர்த்தேக்கங்களில் தீவிர முறையில் கூண்டுகளில் மீன்வளர்ப்பினை மேற்கொள்ளுதல்.
- ஆண்டு முழுவதும் மீன்குஞ்சுகளை பெறும் வகையில் மீன்விதை வங்கிகளை உருவாக்குதல்.
- பாசன குளங்களில் தீவிர மீன்வளர்ப்பினை மேற்கொள்ளுதல்.
- பண்ணைக்குட்டைகள் / பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் வேளாண்மையுடன் மீன்வளர்ப்பினை ஒருங்கிணைத்து, அதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்ட வழிவகை செய்தல்.
- வேகமாக வளரும் மீன் இனங்களான அமூர் கெண்டை, ஜெயந்தி ரோகு, மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா (Genetically Improved Farmed Tilapia (GIFT)) மற்றும் "பங்கேஸியஸ்" (Pangassius) மீன் இனங்களை அறிமுகப்படுத்திட அதற்கான தொழில்நுட்பத்தை பரவலாக்குதல் மற்றும் இந்த மீன் இனங்களுக்கான மீன்குஞ்சு பொறிப்பகங்களை அமைத்தல்.

- மீன் / இறால் குஞ்சு பொரிப்பகங்கள், மீன்வளர்ப்பு, மீன் தீவன உற்பத்தி நிலையம் மற்றும் சுகாதாரமான மீன்விற்பனை நிலையம் ஆகியவற்றிற்கான உட்கட்டமைப்புகளை அமைக்க மீன் வளர்ப்போர் மற்றும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கி ஊக்குவித்தல்.
- உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடி திறனை மேம்படுத்துதல்.
- வண்ணமீன் வளர்ப்பினை ஊக்குவித்து, அதன் மூலம் மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு ஊரக வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

## 8.1 நீர்த்தேக்க மீன்வளம்

தமிழ்நாட்டில் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய என மொத்தம் **61** நீர்த்தேக்கங்கள் மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றில் உள்நாட்டு மீன்வளத்தினைப் பெருக்கிட, **53** நீர்த்தேக்கங்கள் மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலும், **8** நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன.

- நீர்த்தேக்கங்களின் மீன்வளத்தினை தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள உள்நாட்டு மீனவர்களின் வருவாயினைப் பெருக்கிடுவதுடன், நீர்த்தேக்க மீன் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்கோடு,

மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 53 நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமை குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.

- இந்த நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமை குத்தகைக்கு விடுதல் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குத்தகைதாரர் இந்நீர்த்தேக்கங்களைச் சார்ந்த பாரம்பரிய மற்றும் பங்கு மீன்பிடிப்பு செய்யும் மீனவர்களைக் கொண்டே மீன்பிடித்திட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமை 5 வருடத்திற்கு ஏலம் விடப்பட்டு ஏலத்தொகையில் ஆண்டுதோறும் 10 விழுக்காடு தொகை உயர்த்தி குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது.
- இதுவரை 36 நீர்த்தேக்கங்கள் குத்தகைக்கு விடப்பட்டு ரூ.23.96 கோடி அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து நீர்த்தேக்கங்களை குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 8.2 மீன் குஞ்சு உற்பத்தி / மீன் குஞ்சு வளர்ப்பு மையங்கள்

- மீன்வளத்துறை கட்டுப்பாட்டில் 8 இடங்களில் மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூரில் ஒரு மீன்குஞ்சு உற்பத்தி நிலையம்

செயல்பட்டு வருகிறது. **2015–16**ம் ஆண்டில் முன் எப்போதும் இல்லாத சாதனையாக **41.31** கோடி நுண்மீன்குஞ்சுகள் துறைக்கட்டுப்பாட்டிலுள்ள மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் **34** மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் கீழ் **5** மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. **2015–16–**ம் ஆண்டில் **329.77** லட்சம் இளமீன்குஞ்சுகளும் **415.66** இலட்சம் விரலிகளும் மீன்வளத்துறையின் மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களிலிருந்து வளர்த்தெடுக்கப்பட்டு அரசு மற்றும் தனியார் நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்ய விநியோகிக்கப்பட்டுள்ளது.
- மாநிலத்தின் மொத்த மீன் விரலிகளின் தேவை ஆண்டு ஒன்றிற்கு **70** கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் **2015–16–**ம் ஆண்டில் **61.27** கோடி மீன்விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தேவைக்கும் உற்பத்திக்கும் இடையேயான இடைவெளி **8.73** கோடியாக உள்ளது.
- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம், தேசிய புரதச் சத்து மேம்பாட்டு இயக்கம், தமிழ்நாடு நீர்வள நிலவளத்

திட்டம், நபார்டு போன்ற திட்டங்களின் மூலம் கூடுதலாக **34.8** ஹெக்டேரில் அரசு மற்றும் தனியார் மீன்பண்ணைகள் மேம்படுத்தப்பட்டு / புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இம்முயற்சியின் காரணமாக மீன்விரலிகள் தேவை சென்ற ஆண்டிலிருந்த இடைவெளியான **25** கோடியிலிருந்து **8.73** கோடியாக குறைக்கப்பட்டுள்ளது.

## 8.3 மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

- தமிழ்நாட்டில் மீன்வளர்ப்பினை பிரபலப்படுத்தவும் மற்றும் கிராமப்புற பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும், சென்னை தவிர **31** மாவட்டங்களில் இருந்த மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை (FFDA) மற்றும் உவர்நீர் மேம்பாட்டு முகமைகளை (BFDA) ஒருங்கிணைத்து புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் (DFFDA) செயல்பட்டு வருகின்றன.
- விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சியளிப்பதுடன், மீன்வளர்ப்பிற்குத் தேவையான மானியங்களை அளித்து மீன்வளர்ப்பினை ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்ப வழிமுறைகளை வழங்குதல் இம்முகமைகளின் முக்கிய செயல்பாடுகளாகும். இந்த மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

- மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை திட்டத்தின் (District Fish Farmers Development Agency (DFFDA)) கீழ், சுமார் **7,000** ஹெக்டேர் பரப்பு உள்நாட்டு மீன்வளர்ப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பு மற்றும் விற்பனை திட்டத்தின் கீழ் சுமார் **24,600** ஹெக்டேர் பரப்புள்ள ஏரிகள் மற்றும் குளங்கள் உள்நாட்டு மீன்வளர்ப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- சுற்றுசூழலுக்குகந்த நிலைத்த வளம் குன்றா உவர்நீர் மீன்வளர்ப்பு முறையினை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அனைத்து மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளும் (DFFDA), கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்துடன் இணைந்து உவர்நீர் மீன்வளர்ப்பினை மேம்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் முனைந்து வருகின்றன. கடலோர நீர்வாழ் உயிரின ஆணையத்தில் இதுவரை **1,734** இறால் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 8.4 குளிர்நீர் மீன்வளத்தை (Cold Water Fisheries) மேம்படுத்துதல்

தமிழ்நாட்டில் பொழுதுபோக்கு மீன்பிடிப்பிற்கு உகந்த உயர்மட்ட/குளிர்நீர் நீரோடைகள் நீலகிரி மற்றும் மேற்கு தொடர்ச்சி

மலையின் சில பகுதிகளில் அமைந்துள்ளன. அவலாஞ்சியில் உள்ள 'ட்ரெளட்' (Trout) மீன்குஞ்சு பொரிப்பகம் தென்னிந்தியாவிலேயே முதன்முதலாக 1906–ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, செயல்பட்டு வருவது இத்துறையின் பெருமையாகும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள 'ட்ரெளட்' (Trout) நீரோடைகளில் மீன்களின் இருப்பினை அதிகரித்திட ஆண்டுதோறும் 'ட்ரெளட்' (Trout) மீன்விரலிகள் இருப்பு செய்யப்படுகின்றன.

## 8.5 மீன்நலன் ஆய்வு மையம்

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் (NADP) நிதியுதவியுடன் ரூ.1.25 கோடி செலவில் சென்னை சேத்துப்பட்டில் நவீன உபகரணங்களுடன் கூடிய மீன் நோய் ஆய்வக கூடம் மற்றும் நடமாடும் ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வகம் மாநிலத்தின் மீன்வளர்ப்போர் மற்றும் வண்ண மீன் வளர்ப்போரின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. மேலும் தள அளவிலேயே மண் பகுப்பாய்வு, நீரின் தரம் ஆகியவைகளை கண்டறியும் அனைத்து உபகரணங்களுடன் கூடிய நடமாடும் ஆய்வகத்தையும் கொண்டுள்ளது.

## 9 விரிவாக்கம் மற்றும் பயிற்சி

மீன்வளத்துறையில் மீனவர்கள் மீன்வளர்ப்போர் மற்றும் பயனீட்டாளர்கள் நலத்திட்டங்களை அறிந்துகொள்ளும்

நோக்குடன் விரிவாக்கம் மற்றும் பயிற்சி பிரிவு செயல்பட்டு வருகிறது.

- கடலோர மற்றும் உள்நாட்டு மீனவ கிராமங்களில் மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர் அரசின் நலத்திட்டங்கள் தொடர்பான விவரங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்திட விரிவாக்க பணிக்கான கருவிகளுடன் ஐந்து பிரச்சார ஊர்திகள் வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்கு பல்வேறு தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள மீன்வளத்துறை கண்காட்சி மற்றும் வர்த்தக பொருட்காட்சி போன்றவற்றில் பங்கேற்கிறது.
- தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் (NADP), தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) மற்றும் மத்திய அரசின் நிதி உதவியுடன் கூடிய தேவைக்கேற்ப பல்வேறு பயிற்சிகள் மீன்வளர்ப்போர் மற்றும் மீன்பிடி தொழில் சார்ந்த அனைவருக்கும் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

## 9.1 மீன்வள புள்ளியியல்

மீன்வளம் தொடர்பான புள்ளி விவரங்கள் மற்றும் துறையின் மூலம் எய்தப்பட்ட சாதனைகள் குறித்த

விவரங்கள் ஒவ்வொரு வருடமும் வெளியிடப்பட்டு வருகின்றன. இப்புத்தகம் ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்போர், செயற்திட்டமிடுபவர்கள், வளங்களை காப்பவர்கள் போன்றவர்களின் திட்ட வகுத்தலுக்கு உபயோகமாக உள்ளது.

**9.2 மீனவ இளைஞர்களுக்கு கடற்சார் கல்வி**

மீனவ இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும், வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், அரசால் அறிவிக்கப்பட்ட குறிப்பிட்ட 6 கடற்சார் கல்வி பாடப்பிரிவுகளைப் பயின்றிட, மீனவ குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.50,000/– என்ற வீதத்தில் அரசு நிதியுதவி வழங்குகிறது. 2014–15ம் ஆண்டிற்கு அரசால் ரூ.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு 87 மீனவ இளைஞர்களுக்கு ரூ.30 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**10. சிறப்புத் திட்டங்கள்**

**10.1 தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம் (TN-IAMWARM)**

தேர்ந்தெடுக்கப்பட்ட உப வடிநிலப் பகுதிகளில் நீரின் பயன்பாடு மற்றும் உற்பத்தி திறனை அதிகரிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். உலக வங்கி நிதிஉதவியுடன் செயல்படும் தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம்–I கீழ் நீர்நிலைகளில் மீன்உற்பத்தியினை அதிகரிப்பதற்காக தரமான மீன்குஞ்சுகளை

இருப்பு செய்தல் பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்த்தல், கூண்டுகளில் மீன்குஞ்சுகள்/ மீன் வளர்த்தல், மீன்விதை வங்கிகள் உருவாக்குதல், வண்ண மீன் வளர்த்தல் மற்றும் மீன் விற்பனை அங்காடிகள் அமைத்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் வெற்றியினைத் தொடர்ந்து சுமார் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம் – II விரைவில் தொடங்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**10.2 தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் (NADP)**

2015-16

**2015–16**ஆம் ஆண்டு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ **6.88** கோடி செலவில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**அட்டவணை:12**

**தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2015–16**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ.இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாவட்டத்தில் மாதிரி மீன்வள கிராமம் அமைத்தல் | 25.00 | திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில் புளியரை கிராமத்தினை மாதிரி உள்நாட்டு மீன்வள கிராமமாக அமைத்து அங்குள்ள விவசாயிகள் இயற்கை வளங்களை பயன்படுத்தி பல்வேறு மீன்வள செயல்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | | | அவர்களுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும். இத் திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது. |
| 2 | தமிழ் நாட்டிலுள்ள உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடி திறனை உயர்த்துதல் | 160.00 | உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் புதிய மீன்பிடி வலைகள் மற்றும் பரிசல் வாங்குவதற்கு தமிழக அரசால் 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 1,455 உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது. |
| 3 | தமிழ்நாட்டில் அரசு மீன்பண்ணைகளில் உள்ள சினை மீன்களை மின்னணு அடையாளக்குறியீடு மூலம் திறனுடன் மேலாண்மை செய்தல் | 77.77 | அரசு மீன் பண்ணைகளில் சினை மீன்களை மின்னணு அடையாளக் குறியீடு செய்வது முதன் முறையாக அறிமுகபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக வெவ்வேறு இடங்களிலிருந்து பெறப்பட்ட சினை மீன்களை தேர்வு செய்து, இனப்பெருக்கம் செய்வதன் மூலம் உள் இனப்பெருக்கக் குறைபாடுகளை (inbreeding depression) தவிர்த்து தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்ய இயலும், இத்திட்டத்தின் மூலம் அரசு மீன் பண்ணைகளில் சினை மீன்களை மின்னணு அடையாளக் குறியீடு செய்து தரமான மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 4 | தமிழ்நாட்டில் உள்ள நீர் தேக்கங்களில் மிதவை கூண்டுகள் அமைத்து மீன்குஞ்சுகள் வளர்த்தல் | 215.00 | நீர்தேக்கங்களில் HDPE (High density poly Ethylene) தேர்ந்தெடுக்கப்பட்ட மிதவைக் கூண்டுகளில் மீன்குஞ்சுகள் வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். மிதவைக் கூண்டுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. |
| 5 | திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள முறைப்பாசன கண்மாய்களில் மீன்வள மேம்பாடு | 210.00 | இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட முறைப்பாசன கண்மாய்களில், குறுகிய காலத்தில் விற்பனை செய்யுமளவிற்கு வளரக்கூடிய 100 கிராம் அளவிலான மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படும். இத்திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது. |

## 2016–17

2016–17ஆம் ஆண்டு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ 11.02 கோடி செலவில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### அட்டவணை:13

**தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2016–17**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாட்டில் நீர்களைகள் நிரம்பியுள்ள நீர் நிலைகளை உயிரியல் முறை மூலம் கட்டுப்படுத்த புல் கெண்டை மீன் இனங்களை இருப்பு செய்தல். | 202.50 | நீர்க்களைகள் நிரம்பியுள்ள நீர்நிலைகளில் உயிரியல் முறை மூலம் கட்டுப்படுத்த புல் கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில், 10,000 ஹெக்டேர் நீர் பரப்பளவில் 50 இலட்சம் புல் கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| 2 | தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பு பகுதிகளை விரிவுபடுத்திட மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களை ஊக்குவித்தல். | 106.00 | மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ள பயனாளிகள், மீன் குளம் தோண்டுவதற்கும் மற்றும் மீன் குஞ்சு கொள்முதல் செய்வதற்கும் ஹெக்டேருக்கு ரூ.2.10 இலட்சம் மானியத் தொகை வழங்கப்படும். இத்திட்டம் நடப்பாண்டில் 50 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்படும். |
| 3 | தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சிப்பி குளம் மற்றும் கீழவைப்பார் கடற்கரை கிராமங்களில் கூண்டுகளில் கடல் விரால் மற்றும் சிங்கி இறால் வளர்ப்பு மேற்கொள்ளுதல். | 107.26 | மீன்பிடி தொழிலுக்கு மாற்றாக கூண்டுகளில் கடல் விரால் மற்றும் சிங்கி இறால் வளர்ப்பினை மேற்கொள்ள கடல் மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு கூண்டுகள் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 20 கூண்டுகள் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சிப்பிகுளம் மற்றும் கீழவைப்பார் கடற்கரை கிராமங்களில் நிறுவப்படும். ஒவ்வொரு கூண்டும் 4 மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் 80 மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பயன்பெறுவர். |
| 4 | மணிமுத்தாறு அரசு மீன் பண்ணையில் வளர்ச்சி ஒடுக்கப்பட்ட மீன் விரலிகள் உற்பத்தி நிலையம் நிறுவுதல் மற்றும் நர்சரி குளங்களை புணரமைத்தல். | 160.73 | மணிமுத்தாறு அரசு மீன்பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். வளர்ச்சி குன்றப்பட்ட மீன் விரலிகளை உற்பத்தி செய்வதன் மூலம் திருநெல்வேலி மற்றும் அதனைச்சுற்றி உள்ள மாவட்டங்களின் மீன்குஞ்சு தேவையை பூர்த்தி செய்வதுடன், வருடம் முழுவதும் மீன்குஞ்சு கிடைப்பதையும் உறுதி செய்யலாம். இத்திட்டத்தின் மூலம் 10 முதல் 15 இலட்சம் வளர்ச்சி தடைசெய்யப்பட்ட மீன்விரலிகள் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 5 | கிருஷ்ணகிரி அரசு மீன் பண்ணையில் உள்ள திலேப்பியா பொரிப்பகம் மற்றும் மீன் குஞ்சு வளர்ப்பு நிலையத்தை மேம்படுத்துதல். | 400.00 | கிருஷ்ணகிரி அரசு மீன்பண்ணையின் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு கிப்ட்(GIFT) திலேப்பியா மீன்குஞ்சு உற்பத்தி அதிகரிக்கப்படும். |
| 6 | கடலூர் மாவட்டம், லால்பேட்டை அரசு மீன் பண்ணையில் உயிர்வளி மற்றும் நீரின் தன்மையினை நிலைப்படுத்துவதன் மூலம் தீவிர மீன் குஞ்சு உற்பத்தி மேற்கொள்ளுதல். | 10.95 | லால்பேட்டை அரசு மீன்பண்ணையில் காற்று புகுத்திகள் மற்றும் நன்மை செய்யும் பாக்டீரியாக்களை பயன்படுத்தி சிறந்த முறையில் நீர் மேலாண்மை செய்வதன் மூலம் மீன்குஞ்சுகளின் பிழைப்புத்திறன் அதிகரித்து மீன்குஞ்சு உற்பத்தி அதிகரிக்கப்படும். |
| 7 | தமிழ்நாட்டிலுள்ள உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடிப்பு திறனை மேம்படுத்துதல். | 113.63 | உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் புதிய மீன்பிடி வலைகள் மற்றும் பரிசல்கள் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படும். |

## 10.3. தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய திட்டங்கள் 2014–15

**ஊரக மகளிருக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிட தமிழகத்தின் 10 மாவட்டங்களில் வண்ணமீன் வளர்ப்பு மற்றும் விற்பனை மையங்கள் அமைத்தல்**

வண்ண மீன் வளர்ப்பில் ஊரக மகளிருக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கும் நோக்கோடு இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாவட்டங்களில் 25 வண்ண

மீன் வளர்ப்பு அலகுகள் ரூ.2.13 கோடி செலவினத்தில் அமைக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பயனாளிக்கும் 50 விழுக்காடு பின்நிலை மானியமாக ரூ.50,000/– வழங்கப்படும். இதுவரை, 250 தகுதிவாய்ந்த பெண் பயனாளிகளுக்கு ரூ.67.91 இலட்சம் முதல் தவணையாக விடுவிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளால் வண்ணமீன் வளர்ப்பு அலகுகள் மற்றும் வண்ண மீன்வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**2015–16**

தேசீய மீன்வள மேம்பாட்டு வாரியம் 2015–16ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளத்தினைப் பெருக்கிடும் பொருட்டு கீழ்க்கண்ட மீன்வள செயல் நடவடிக்கைகளுக்காக ரூ.65.13 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**அட்டவணை.14**

**தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய திட்டங்கள் (2015–16)**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மொத்த தொகை (ரூபாய் இலட்சம்) | திட்ட விவரம் |
|---|---|---|---|
| 1. | புவனேஸ்வரில் உள்ள மத்திய நன்னீர் மீன்வளர்ப்பு நிலையத்தின் மூலம் அரசு பணியாளர்களுக்கு இந்திய பெருங்கெண்டை மீன்களின் பன்முறை இனப்பெருக்கம் மற்றும் முட்டைகளை உறைநிலையில் பாதுகாப்பது தொடர்பான செயல்முறை பயிற்சி | 4.00 | முதற்கட்டமாக மீன்வளத்துறையில் பணியாற்றும் 25 அலுவலர்களுக்கு பயிற்சி முடிவடைந்துள்ளது. இரண்டாவது கட்ட பயிற்சி டிசம்பர் 2016ல் துவங்கவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 2. | ஆசிய கௌுத்தி மீன் இனப்பெருக்கம், மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு முறைக்கான செயல்முறை பயிற்சி புவனேஸ்வரிலுள்ள மத்திய நன்னீர் மீன்வளர்ப்பு நிலையத்தின் மூலம் வழங்குதல். | 4.00 | முதற்கட்டமாக மீன்வளத்துறையில் பணியாற்றும் 25 அலுவலர்களுக்கு பயிற்சி ஆகஸ்ட் 2016ல் துவங்கவுள்ளது. |
| 3. | துறை பணியாளர்களுக்கு மீன் மற்றும் ஓட்டுடலிகளுக்கான நோய் மேலாண்மை குறித்த செயல்முறை பயிற்சி வழங்குதல். | 4.00 | மீன்வளத்துறையில் பணியாற்றும் 50 அலுவலர்களுக்கு இரண்டு கட்டமாக பயிற்சி வழங்கப்படவுள்ளது.<br>முதற்கட்ட பயிற்சி டிசம்பர் 2016ல் துவங்கப்படவுள்ளது. |
| 4. | தமிழ்நாட்டின் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு கடலில் படகு செலுத்தும் வழிமுறைகள், மின் கருவிகள் இயக்கம் மற்றும் படகு இயந்திர பராமரிப்பு குறித்த பயிற்சி. | 21.25 | 1,000 ஆழ்கடல் மீனவர்களுக்கு கடலில் படகு செலுத்தும் வழிமுறைகள், மின் கருவிகள் இயக்கம் மற்றும் படகு இயந்திர பராமரிப்பு குறித்த பயிற்சி வழங்குதல்.<br>முதற்கட்டமாக 175 ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களுக்கு பயிற்சி முடிவடைந்துள்ளது. |
| 5. | கடலோர மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மதிப்பு கூட்டப்பட்ட மீன்பொருட்கள் தயாரித்தல் குறித்த பயிற்சி. | 31.88 | 2,500 கடலோர மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மதிப்பு கூட்டப்பட்ட மீன் பொருட்கள் தயாரித்தல் குறித்த பயிற்சி வழங்குதல்.<br>இதுவரை 120 மீனவ மகளிர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. |

## 11. மீனவ கூட்டுறவு சங்கங்கள்

தமிழக மீனவர் மற்றும் மீனவ மகளிரது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் மீனவ கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மீன்வளத்துறையானது மீனவர் / மீனவ மகளிருக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அரசின் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1,418 தொடக்க மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் / மாவட்ட கூட்டுறவு இணையங்கள் / மாநிலத் தலைமை கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் 7.21 இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் அங்கத்தினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 51 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 15 பகுதிநேர நியாய விலைக்கடைகளையும் நடத்தி வருகின்றன.

மீன்துறை ஆணையர் கட்டுப்பாட்டில் செயல்படும் 1,418 மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கும் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு 10,002 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அச்சங்கங்களில் பொறுப்பேற்றுள்ளனர். தற்போது அனைத்து மீனவர் கூட்டுறவு சங்கங்களும் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றன.

மீனவர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உறுப்பினர்கள் விவரம் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை.15**
**மீனவ கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்**

| சங்கத்தின் வகை | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **தொடக்க கூட்டுறவு சங்கங்கள்** | | |
| கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 557 | 3,66,272 |
| கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 458 | 2,50,226 |
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 297 | 87,207 |
| உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 68 | 7,758 |
| இதர வகைச் சங்கங்கள் | 26 | 7,283 |
| **மொத்த கூட்டுறவு சங்கம் மற்றும் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள்** | **1,406** | **7,18,746** |
| மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம் | 11 | 975 |
| தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் | 1 | 785 |
| **கூடுதல்** | **1,418** | **7,20,506** |

## 12. தமிழ்நாடு மீனவர் நல வாரியம் (TNFWB)

தமிழகத்தில் மீன்பிடி மற்றும் அதனைச் சார்ந்த தொழிலினை மேற்கொள்ளும் அனைத்து தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்கும், அவர்களது நலத்தினை உறுதி செய்வதற்காகவும், தமிழ்நாடு மீனவர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு மீனவர் நல வாரிய தலைமை

அலுவலகம், சென்னை, நீலாங்கரையில் இயங்கி வருகிறது. **4.38** இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் தொழிலாளர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினராக சேர்ந்துள்ளனர். தமிழ்நாடு மீனவர் நல வாரிய சட்டத்தின்படி இதுவரை பல்வேறு முகமைகளிடம் இருந்து ரூ.**14.85** கோடி நிதி வசூலிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் பின்வருமாறு

**அட்டவணை : 16**
**தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்**

| வ. எண் | நிவாரணம் அல்லது உதவி | தொகை (ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|---|
| 1. | விபத்து நிவாரணம் | | | | |
| | (அ) விபத்தினால் மரணம் | 1,00,000 | | | |
| | (ஆ) இரண்டு கைகள் இழப்பு | 1,00,000 | | | |
| | (இ) இரண்டு கால்கள் இழப்பு | 1,00,000 | | | |
| | (ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | 1,00,000 | | | |
| | (உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | 1,00,000 | | | |
| | (ஊ) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 50,000 | | | |
| | (எ) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | 20,000 | | | |
| 2. | மீன்பிடிக்கையில் இறத்தல் அல்லது அதற்குப் பின் உடனடியாக விபத்தின் காரணமாக அல்லாமல் | 1,00,000 | | | |
| 3. | மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர் | 1,00,000 | | | |
| 4. | இயற்கை மரணம் | 15,000 | | | |
| 5. | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 | | | |
| 6. | உறுப்பினர்களின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்கி படிப்பவர்கள் | |
| | | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் |
| | அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,250 | 1,500 | –– | –– |
| | ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | –– | –– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இ)தொழிற்பயிற்சி (I.T.I) மற்றும் பல்தொழிற் நுட்ப பயிற்சி (Polytechnic) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |
| | உ) இளங்கலை பட்டப்படிப்பு | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |
| | ஊ) முதுகலை பட்டப்படிப்பு | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |
| | எ) சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள் இளங்கலை | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |
| | ஏ) முதுகலை தொழிற் கல்விகள் | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 7. | திருமண உதவி | | | ஆண் | பெண் |
| | அ) உறுப்பினரின் திருமண உதவி<br>ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம் | | | 3,000<br>3,000 | 5,000<br>5,000 |
| 8. | மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித் தொகை | | | | |
| | i) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் ஆறு மாதங்கள்) | | | 6,000 | |
| | ii) கருச்சிதைவு | | | 3,000 | |
| | iii) கருக்கலைப்பு | | | 3,000 | |
| 9. | முதியோர் ஓய்வூதியம் (65 வயதுக்கு மேற்பட்டோர்) | | | மாதம் ஒன்றிற்கு ரூ.400 | |

- **2015–16** ஆம் ஆண்டில் **5,491** கேட்பு விண்ணப்பங்களுக்கு உதவித் தொகை மற்றும் நிவாரணத் தொகையாக ரூ.**3.08** கோடி மற்றும் **2016–17**ம் ஆண்டில் **1,948** கேட்பு விண்ணப்பங்களுக்கு ரூ.**96** இலட்சம் **(15.07.2016** வரை) பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

- பயனாளிகளுக்கு நிவாரணம் / உதவித் தொகை, வழங்குவதில் வெளிப்படையான தன்மையை உறுதி செய்வதற்காகவும், மிக விரைவாக நிவாரணம் உடனே பயனாளிகளுக்கு சென்றடைவதற்காகவும் தேசிய

மின்னணு பண பரிமாற்றம் (NEFT) மூலமாக நிவாரண உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 13. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) (Tamil Nadu State Apex Fisheries Co-operative Federation Limited (TAFCOFED))


தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளகூட்டுறவு இணையம் லிமிடெட், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983ன் கீழ் பதிவு செய்யப்பட்டு கடந்த 19.10.1992 முதல் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்பொழுது இணையத்தில் 477 கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 141 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 158 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 9 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இவ்வுறுப்பினர் சங்கங்கள் ரூ.91.43 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தியுள்ளன.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் 17 தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள், அரசால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் 7 பேர் மற்றும் நிர்வாகக்குழுவினரால் முன்மொழியப்பட்ட ஒரு உறுப்பினர் ஆகிய 25 நிர்வாகக்குழு உறுப்பினர்களைக் கொண்டு நிர்வகிக்கப்பட்டுவருகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் நிர்வாக அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**படம்:2**

**தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் நிர்வாக அமைப்பு**




தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், மீன்வளத்துறை வாயிலாக செயல்படுத்தப்படும் பல்வேறு மீனவ நலத்திட்டங்களை செயல்படுத்திவருகிறது. இத்துடன்

இணையத்தின் வருவாயினை பெருக்கிட பல்வேறுவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் முக்கிய செயல்பாடுகள்.

### 13.1 உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை செய்தல்

மத்திய மற்றும் மாநிலஅரசு மானியத்திட்டத்தின் கீழ் உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களை, பாரம்பரிய மீனவர்களுக்கு விற்பனை செய்திட மீன்வளத் துறை தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தினை அங்கீகரித்துள்ளது. 2015-16ஆம் ஆண்டில், 540 உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் ரூ.161 இலட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

### 13.2 பாரம்பரிய இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு மானிய விலையில் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களை சேர்ந்த மண்ணெண்ணெயினால் இயங்கும் இயந்திரம் பொருத்திய பாரம்பரிய நாட்டுப்படகு மீன்பிடி படகுகளுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானிய விலையில் தொழிலக மண்ணெண்ணெயினை 13 தொடக்க மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் இணையம் விநியோகம் செய்துவருகிறது. 2015-16 ஆம்

ஆண்டில், 3,712 கிலோலிட்டரும், ஜுன் 2016 வரை 808 கிலோலிட்டரும் தொழிலக மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது.

**13.3 மீன்பிடி கலன்களுக்கு விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட டீசல் வழங்குதல்**

கடலோர மாவட்டங்களில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மூலம் நிறுவப்பட்டுள்ள 12 டீசல் விற்பனை நிலையங்கள் மூலம் 2015-16ஆம் ஆண்டில், 17,491 கிலோ லிட்டரும், ஜுன் 2016 வரை **3,124** கிலோ லிட்டரும் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் மீன்பிடி கலன்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

**13.4 மீன் விற்பனை**

**13.4.1 சில்லறை மீன்விற்பனை நிலையங்கள்**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம், நெய்வேலி அனல் மின் நிலைய நகரியம் மற்றும் அரியலூர் ஆகிய இரண்டு இடங்களில் சில்லறை மீன் விற்பனை நிலையங்களை நடத்திவருகிறது.

**13.4.2 நவீன மீன் விற்பனை நிலையங்கள்**

தலைமை கூட்டுறவு இணையம் மற்றும் உறுப்பினர் சங்கங்களின் மீன்விற்பனையினை மேம்படுத்திடவும், பொது மக்களுக்கு தரமான மீன்களை நியாயமான விலையில்

வழங்கிடவும், தலைமை கூட்டுறவு இணையம் சென்னையிலும், இராமநாதபுரம் மாவட்டம் பாரதி நகரிலும், ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் 40 விழுக்காடு மானியத்துடன் இரண்டு நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**13.4.3 மீன் விற்பனை ஊர்திகள்**

தமிழ்நாடு தலைமை மீன்வள கூட்டுறவு இணைய உறுப்பினர் சங்கங்களின் மீன் விற்பனைக்கு ரூ.21.96 இலட்சம் மதிப்புள்ள 3 நான்கு சக்கர வாகனங்களை தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் 40 விழுக்காடு மானிய நிதியுதவி ரூ.8.79 இலட்சத்தில் வழங்கியுள்ளது.

**13.4.4 மாநில திட்டக்குழு–மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியுதவியுடன் (State Balanced Growth Fund) மீன் ஏற்றிச்செல்லும் வாகனங்கள் வழங்குதல்**

சில்லறை மீன் விற்பனையில் ஈடுபட்டுள்ள மீனவர்கள், மீன்களை பேருந்துகளில் ஏற்றிச்செல்லும் போது ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கவும், மீனவர்கள் உரிய நேரத்தில் எளிதாக மீன்களை சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து, நல்ல விலையினைப் பெறவும், தமிழ்நாட்டில் பின்தங்கிய ஒன்றியங்களில் உள்ள கடல்/உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு, ரூ.71 இலட்சம் மதிப்பீட்டில், 10 மீன்ஏற்றிச் செல்லும் நான்கு சக்கர

வாகனங்கள் மாநில திட்டக்குழு – மாநில சமச்சீர் வளர்ச்சி (SBGF) நிதியுதவியுடன் வழங்கப்பட்டுள்ளது.

### 13.4.5 குளிர்காப்புபெட்டிகள் பொருத்தப்பட்ட இரு சக்கர வாகனங்கள் வழங்குதல்

தலைமை கூட்டுறவு இணையம் மூலம் சில்லரை மீன் விற்பனையில் ஈடுபட்டுள்ள கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் அதிக மீன்களை கையாளும் பொருட்டும், நுகர்வோருக்கு தரமான மீன்களை விரைவில் கொண்டு சேர்க்கும் பொருட்டும் மீனவர்களுக்கு தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் 25 விழுக்காடு மானியத்துடன் (30 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு) **2015–16**ம் ஆண்டில் குளிர்காப்பு பெட்டிகள் பொருத்திய **1,000** இருசக்கர வாகனங்கள் வாங்க சில்லறை மீன்விற்பனையாளர்களுக்கு **ரூ.95.05** இலட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

### 13.5 ஆபத்துக்கால எச்சரிக்கை விடுக்கும் கருவி வாங்கி வழங்குதல்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், மத்திய மாநில அரசு நிதியுதவி திட்டத்தின்கீழ் கடலில் மீன்பிடிக்கும்போது ஏற்படும் இடர்பாடுகளின் போது ஆபத்துக்கால தகவல் பரப்பும் கருவிகளை, பதிவு செய்யப்பட்ட மீன்பிடி படகுகளுக்கு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திவருகிறது. இத்திட்டத்தின் கீழ், **30,000** ஆபத்துகால எச்சரிக்கை அனுப்பும்

கருவிகள் ரூ.48 கோடி மதிப்பீட்டில் வாங்கி வழங்கப்படும். இத்திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.02.16 அன்று துவக்கிவைத்தார்கள்.

**13.6 கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் குளிர்காப்பு பெட்டிகள் வழங்குதல்**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம், தமிழக மீனவர்களுக்கு கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின்(Marine Products Export Development Authority (MPEDA)) **50** விழுக்காடு மானியத்துடன் பல்வேறு அளவீடுகளில் குளிர்காப்பு பெட்டிகள் மீனவ பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது. **2015– 16** ஆம் ஆண்டில், **657** குளிர்காப்பு பெட்டிகள் ரூ.**21.45** இலட்சம் மானியத்தில் வழங்கியுள்ளன.

**13.7 பயிற்சி திட்டங்கள்**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (National Fisheries Development Board), தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் (National Agriculture Development Programme) மற்றும் மத்திய அரசின் நிதியுதவியுடன் மீனவர்களுக்குத் தேவையான பல்வேறு பயிற்சி முகாம்களை

நடத்துவதுடன், அரசின் நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறது.

13 கடற்கரை மாவட்டங்களைச்சேர்ந்த 260 மீனவ மகளிருக்கு, மீனவ மகளிரை சுயதொழில் முனைவோராக உருவாக்கிட உதவிடும் பொருட்டு தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவிடன், ரூ.5.42 இலட்சம் செலவில் "சூரிய ஒளியால் இயங்கும் மின்விளக்குகள் தயாரித்தல் மற்றும் பழுது நீக்குதல்" குறித்த பயிற்சியினை வழங்கியுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள தமிழக மீனவர்களுக்கு "கடல்சார் மேலாண்மை, தொலைத்தொடர்பு சாதனங்கள் பழுது பார்த்தல், மற்றும் இயந்திரப் பராமரிப்பு" தொடர்புடைய பயிற்சியினை மத்திய மீன்வள தொழில்நுட்ப மற்றும் கடல்சார் நிறுவனம் (Central Fisheries Nautical Engineering Technology) மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் அளித்து வருகிறது. இப்பயிற்சியின் கீழ் ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள 1,000 மீனவர்களுக்கு 40 குழுக்களாக பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சல் மீனவர் பயிற்சி நிலையத்தின் வாயிலாக இதுவரை, 235 மீனவர்கள் அடங்கிய நான்கு குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ‘‘மதிப்பூட்டப்பட்ட மீன்பொருட்கள் தயாரிக்கும்’’ பயிற்சியினை தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் நடத்தி வருகிறது. முதல் கட்டமாக, 2,500 மீனவ மகளிருக்கு 125 குழுக்களாக ரூ.31.87 இலட்சம் செலவில் இத்திட்டம் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

**13.8.1 சென்னை பழைய மகாபலிபுரம் சாலையில் புதிய பெட்ரோல் மற்றும் டீசல் சில்லரை விற்பனை நிலையம் நிறுவுதல்**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு, காஞ்சிபுரம் மாவட்டம் வாணியஞ்சாவடி புல எண்.105, கழிப்பட்டூர் கிராமத்தில் பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையம், ரூ.80 இலட்சம் செலவில் அமைக்கப்படும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**13.8.2 நவீன மீன் உணவகம் நிறுவுதல்.**

காஞ்சிபுரம் மாவட்டம் வாணியஞ்சாவடி புல எண்.105, கழிப்பட்டூர் கிராமத்தில் ரூ.1.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன மீன் உணவகத்துடன் கூடிய மீன்விற்பனை அங்காடியினை ரூ.89 இலட்சம் செலவில் நிறுவிட தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. இந்த தொகையில், மீதித்தொகை ரூ.61 இலட்சம் இணையத்தின்

சொந்த நிதியிலிருந்து செலவிடப்படும். இதன் கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.

**14. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் (வரையறுக்கப்பட்டது)**
(Tamil Nadu Fisheries Development Corporation Limited (TNFDC Ltd.))


தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974–ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனமாக தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடி மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.4.45 கோடியாகும்.

- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக இயக்குநர்கள் தமிழக அரசால் நியமிக்கபடுகிறார்கள்.
- தற்போது பல்வேறு பதவிகளில் 126 பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக கட்டமைப்பு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

படம்:3

**தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகந்தி நிஷ்ரி ச இநீர ம்மு**




### 14.1 மீன்குஞ்சு உற்பத்தி

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தனது கட்டுப்பாட்டில், சுமார் 3.83 ஹெக்டரில் மீன்குஞ்சு உற்பத்தி / வளர்ப்பு பண்ணைகளை சாத்தனூர், ஆழியார், அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு, பொறந்தாலாறு ஆகிய நீர்த்தேக்கப்பகுதிகளில் அமைத்துள்ளது. உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழக கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன் மீன்வளத்துறை மற்றும் தனியார் மீன் பண்ணைகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**2015–16**ஆம் ஆண்டில், **167.07** இலட்சம் நுண் மீன்குஞ்சுகளும் **38.66** இலட்சம் மீன் குஞ்சு பெருவிரலிகளும் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.**66.18** இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. மேலும், **2016–17**ஆம் ஆண்டில் ஜூன் **2016** முடிய **56** இலட்சம் நுண்மீன்குஞ்சுகளும், **5.3** இலட்சம் மீன் குஞ்சு பெருவிரலிகளும் உற்பத்தி செய்யப்பட்டதன் மூலம் ரூ.**11.48** இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**14.2 நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மை**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகக் கட்டுப்பாட்டில் உள்ள எட்டு நீர்த்தேக்கங்களில், வளங்குன்றா மீன் உற்பத்தியினை பெருக்கிட, அறிவியல் ரீதியான முறையில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படுகின்றன.

வருவாயினை அதிகரித்திடும் பொருட்டு, பவானிசாகர், ஆழியார், அமராவதி, திருமூர்த்தி, பாலார் பொறந்தலாறு மற்றும் பெரும்பள்ளம் ஆகிய நீர்த்தேக்கங்களின் மீன் பிடிப்பு உரிமையினை தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேலும், உப்பாறு மற்றும் சாத்தனூர் நீர்த்தேக்கங்களின் மீன்பிடிப்பு உரிமையினை தனியாருக்கு குத்தகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2015–16**ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம், **713.38** டன் மீன்கள் பிடிக்கப்பட்டு, ரூ.**587.95** இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

ஜுன் 2016 முடிய 159.54 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு, ரூ.156.40 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 14.3 வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை

ஆழியார் மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் வண்ண மீன் இனப்பெருக்கம் மற்றும் உற்பத்தி நிலையங்களையும், ஆழியார், திருமூர்த்தி நகர் மற்றும் சென்னையில் வண்ண மீன் விற்பனை நிலையம் மற்றும் மீன் காட்சியகங்களையும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இயக்கி வருகிறது.

2015–16ஆம், நிதியாண்டில் வண்ணமீன்கள் மற்றும் அதற்கான துணை சாதனங்கள் விற்பனை மூலம் ரூ.20.78 இலட்சம் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. ஜுன் 2016 வரை, ரூ.5.07 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 14.4 மீன் விற்பனை

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சில்லறை மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் மூலமாக, 2015–16ஆம் ஆண்டில் 930.12 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு ரூ.101.43 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், சென்னை, கோவை மற்றும் திருப்பூர் ஆகிய நகரங்களில் மீன் உணவகங்கள், நடமாடும் மீன் உணவகங்களை தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் நடத்தி வருகிறது.

ஜுன் **2016** வரை **236.83** டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு, ரூ.**27.92** இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

### 14.5 எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள்

மாநிலத்தின் கடலோரப் பகுதியில் அமைந்துள்ள மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில், **30** டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டு, இயந்திரமாக்கப்பட்ட நாட்டுப் படகு மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு **2015–16**ஆம் ஆண்டில் **86,702** கிலோ லிட்டர் வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் விற்பனை செய்யப்பட்டு, ரூ.**8.49** கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. ஜுன் **2016** வரை, **15,179** கிலோ லிட்டர் டீசல் விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் ரூ.**154.55** இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

### 14.6 பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய வணிகரீதியிலான மண்ணெண்ணெய் வழங்குதல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பாரம்பரிய மீன்பிடி நாட்டு படகுகளுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய மண்ணெண்ணெய், **2015–16**ஆம் ஆண்டில் **5,584** கிலோ லிட்டர் விநியோகம் செய்யப்பட்டு, ரூ.**17.06** இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. ஜுன் **2016** வரை, **1,228** கிலோ லிட்டர்

மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ.5 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

## 14.7. இதர திட்டங்கள்

கீழ்க்காணும் புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### 14.7.1. புதிய கூடுதல் அலுவலக் கட்டிடம் அமைத்தல்

சாந்தோமிலுள்ள சென்னை மீன் விற்பனை பிரிவிற்காக, கூடுதலாக அலுவலகக் கட்டிடம் ஒன்றினை ரூ.2.50 கோடி செலவின மதிப்பீட்டில், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் அதன் நிதியில் கட்டிட திட்டமிட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 14.7.2. கோயம்புத்தூர் குறிச்சியில் குளிர்ப்பதன வசதியுடன் கூடிய மீன்களை கையாளும் மையம் அமைத்தல்

வெகுதூரத்திலுள்ள நீர்த்தேக்கங்களிலிருந்து பிடிக்கப்பட்ட மீன்களை, தரமான முறையில் விற்பனை செய்திட, குளிர்ப்பதன கிடங்கு வசதியுடன் கூடிய மீன்களை கையாளும் நிலையம் ஒன்றினை, கோயம்புத்தூர் மாவட்டம் குறிச்சியில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் ரூ.70 இலட்சம் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

### 14.7.3. ஈரோடு மாவட்டம், பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் மீன்பிடி இறங்கு தளம் அமைத்தல்

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் பிடிக்கப்படும் மீன்களை, சுகாதாரமான முறையில் கையாண்டு,

விற்பனை செய்திடும் வகையில், நவீன மீன்பிடி இறங்கு தளம், மீன் விற்பனை நிலையம் மற்றும் மீனவர்களுக்கான வலைபின்னும் கூடம் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் ரூ.60.44 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**14.8. நிதி நிலை**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், மீன் விற்பனை, கடல் மீன் உணவு மையங்கள், டீசல் எரியெண்ணெய் / மண்ணெண்ணெய் விநியோகம் மற்றும் நீர்த்தேக்க மேலாண்மை ஆகிய வணிக ரீதியிலான செயல்பாடுகள் மூலமாக 2015–16ஆம் ஆண்டில், தணிக்கை முடிக்கப்படாத இலாபமாக ரூ.9.75 கோடி ஈட்டியுள்ளது.

**14.8.1. அரசுக்கு செலுத்தப்பட்ட பங்கு ஈவு தொகை**

2015–16ஆம் ஆண்டிற்கு ரூ.1.58 கோடி பங்கு ஈவு தொகையாக மாநில அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

**14.8.2. மீன் வள திட்டங்கள் மற்றும் மீனவர்களின் நலத்திட்டங்களில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பங்களிப்பு**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 2015–16ஆம் நிதியாண்டில், ரூ.105.33 இலட்சம் தமிழ்நாடு மீனவர் நலவாரியத்திற்கு, தனது பங்களிப்பாக வழங்கி உள்ளது.

**2015–16** நிதியாண்டில், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் சமுதாய பங்களிப்பாக, **ரூ.27.99** இலட்சம் நிதியினை கீழ்க்கண்டவாறு பல்வேறு மீனவர் நலத்திட்டங்களுக்காக பெருநிறுவன சமூக பொறுப்பு (Corporate Social Responsibility) நிதியிலிருந்து செலவிட்டுள்ளது.

| | |
|---|---|
| கடலாமை விடுவிப்பு பொறி (Turtle Excluder Device) குறித்த விழிப்புணர்வு பற்றிய பதாகைகள் | – ரூ.1,62,500/- |
| நீலாங்கரையிலுள்ள மீன் அங்காடியினை நவீனமயமாக்கல் | – ரூ.20,21,600/– |
| பெசன்ட் நகரிலுள்ள மீன் அங்காடியினை நவீனமயமாக்கல் | – ரூ.1,50,000/– |
| மீனவர் நலன் | –ரூ. 4,45,282/– |
| காணாமல்போன மீனவர்களை தேடுதல் பணிக்கான செலவினம் | – ரூ.20,000/– |
| **மொத்தம்** | **ரூ.27,99,382/–** |

### 14.9. புதிய திட்டங்கள்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது, மீன்வளத்துறையின் மூலம் அமைக்கப்பட்ட சேத்துப்பட்டு பசுமை பூங்காவின் ‘‘இயக்கம் மற்றும் பராமரிப்பு’’ பணிகளை **27.02.2016** முதல் மேற்கொண்டு வருகிறது. பொழுதுபோக்கு மீன்பிடிப்பு மற்றும் பசுமை பூங்காவிற்கு, ஜுன் **2016** வரை **1,23,808** எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் வருகை புரிந்துள்ளனர்.

## 15.தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், மாநில அரசின் நிதியுதவியுடன், மாநில வேளாண் பல்கலைக்கழக முறைகள் மற்றும்

பாடத்திட்டத்தைத் தழுவி, இந்தியாவிலேயே மீன்வளத்தில் தனித்துவ தொழில் கல்வி வழங்கும் பல்கலைக்கழகமாக கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க கல்வி மூலம் மீன் உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டை மேம்படுத்தி வருகிறது.

மீன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை அதிகரித்திடும் பொருட்டு, மாநிலத்தில் தொழில்நுட்பரீதியான மனிதவளத் தேவையினைப் பூர்த்தி செய்திடும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாகப்பட்டினத்தில் மீன்வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என **13.09.2011** அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, நாட்டிலேயே முதன்முதலாக தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், **19.06.2012** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

## 15.1. பல்கலைக்கழகத்தின் தொலைநோக்குப் பார்வை

‘‘அறிவியல் அடிப்படையிலான மீன்வள முன்னேற்றத்தால் மக்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்துத் தேவையைப் பூர்த்தி செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்’’ ஆகும்.


## 15.2. நோக்கங்கள்

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- மீன்வள அறிவியல் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தரமான தொழிற் கல்வியை வழங்குதல்;
- மீன்வள அறிவியலில் உள்ள முதன்மையான பிரிவுகளில் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு முறையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்;
- மீன்வளர்ப்போர்கள், மீனவர்கள், வேலையில்லா இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு, மீன்வளம் சார்ந்த அறிவியல் பிரிவுகளில் பயிற்சி, கலந்தாலோசனை மற்றும் திட்ட அறிக்கை தயாரித்தல் போன்ற விரிவாக்க சேவைகளை அளித்தல்;
- மீன்வள அறிவியலில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு முன்னேற்றம் ஏற்பட துணைபுரிந்து, மாநிலத்தின் பொருளாதாரத்தில் மீன்வளப்பிரிவு மூலம் கூடுதல் பங்களிப்பினை வழங்குதல் மற்றும் மீன்வள அறிவியல் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் போன்றவைகளுக்கான இலக்கினை நிர்ணயித்தல்;
- நீர்வாழ் உயிரினங்களின் பல்லுயிர் பெருக்கம் மற்றும் மீன்வள ஆதாரங்கள் ஆகியவற்றிற்கான அடிப்படை விவரங்களை சேகரித்தல்;
- இந்திய கால்நடை குழுமத்தின் கட்டுப்பாட்டு விதிகளை மாதிரியாகக் கொண்டு, மீன்வள அறிவியலில் தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்குதல்;
- மீன் மற்றும் மீன் பொருட்களை சந்தைப்படுத்திடவும் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயாரிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்;
- நீர்வாழ் உயிரினங்களில் நோய் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை முறையை தமிழ்நாட்டில் ஏற்படுத்துதல் ;

## படம்:4

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்
நிர்வாக அமைப்பு



தூத்துக்குடி வளாகத்தில் உள்ள மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இந்தியாவின் இரண்டாவது மீன்வளக்கல்லூரியாக 1977 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கல்லூரியின் மூலம் இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், 2012 ஆம் ஆண்டு பொன்னேரியில் நிறுவப்பட்ட மீன்வள தொழில்நுட்ப நிலையம், 2014ம் ஆண்டு முதல் மீன்வள கல்லூரியாக மேம்படுத்தப்பட்டு, 40 மாணாக்கர்கள் 2015–16ஆம் கல்வி ஆண்டில் சேர்க்கப்பட்டு, இளங்கலை பட்டப்படிப்பு வழங்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள மற்றொரு மீன்வள தொழில்நுட்ப நிலையம், 2015–16ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் மீன்வள பொறியியல் கல்லூரியாக மாற்றப்பட்டு, 20 மாணாக்கர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், மாதவரம் மற்றும் வாணியஞ்சாவடி வளாகத்தில் உள்ள இப்பல்கலைக்கழக நிலையங்களின் மூலம் முதுகலை ஆராய்ச்சி பட்டங்களை வழங்க அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### 15.3. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள்

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய செயல்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

### 15.3.1. கல்வி

- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் **2015–16** ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை விவரமானது கீழே அட்டவணை 17ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 17.**
**மாணவர் சேர்க்கை விவரம்**

| பாடப்பிரிவுகள் | மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | | மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி | | மீன்வளப் பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினம், | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| இளங்கலை மீன்வளம் (B.F.Sc.,) | 20 | 20 | 26 | 15 | -- | -- | 81* |
| இளங்கலை மீன்வளப் பொறியியல் (B.E.,) | -- | -- | -- | -- | 10 | 10 | 20 |
| முதுகலை மீன்வளம் (M.F.Sc) | 19 | 12 | -- | -- | -- | -- | 31 |
| முனைவர் பட்டம் (Ph.D) | 5 | 5 | -- | -- | -- | -- | 10 |
| மொத்தம் | | | | | | | **142** |

** சர்வதேச மாணவர் சேர்க்கை (1 எண்ணிக்கை) உட்பட*

- இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் இளங்கலை மற்றும் முதுகலை மாணவ மாணவிகளுக்கு, மத்திய மாநில அரசுகள் அளிக்கும் பல்வேறு வகையான கல்வி

உதவித்தொகை மற்றும் ஆராய்ச்சி ஊக்கத்தொகை வழங்கப்படுகின்றன. முதுநிலை மற்றும் முனைவர் பட்டப் படிப்பிற்கு, இப்பல்கலைக்கழகத்தில் நுழைவுத் தேர்வின் மூலம் சேரும் மாணவர்களுக்கு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக உதவித் தொகை மாதத்திற்கு முறையே ரூ.4,000/– மற்றும் 5,000/–வழங்கப்படுகின்றது. மாணவர்கள் சிறந்த முறையில் படித்து அறிவினை மேம்படுத்திட அனைத்து வசதிகளும் அமைந்துள்ளன.

- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழா ராஜ்பவனில் மாண்புமிகு தமிழக ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக வேந்தர் முனைவர் கே. ரோசய்யா முன்னிலையில் 27.02.2016 அன்று நடைபெற்றது.

### 15.3.2. ஆராய்ச்சி

- மண்டபத்திலுள்ள கடல் மீன் குஞ்சு பொரிப்பக மையம் (Marine Finfish Hatchery, Mandapam) தேசிய வேளாண் அபிவிருத்தி வாரியத்தின் ரூ.185.40 இலட்சம் நிதியுதவியுடன் உருவாக்கப்பட்டு, 2014–15ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.கடல் மீனின் இனப்பெருக்கம் மற்றும் மீன்குஞ்சு உற்பத்தி ஆகியன சார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கடலோர மாவட்டத்திலுள்ள மீனவர்களின் மாற்று

வாழ்வாதாரத்திற்காக கடல் மீன் பண்ணை அமைத்தல் மற்றும் வண்ண மீன் உற்பத்தி செய்தல் ஆகிய விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரியில் உள்ள சினை இறால் வங்கி திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தி ஆணையத்தின் ரூ.198.91 இலட்சம் நிதியுதவியுடன் 2014–15ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் இறால்களை தனிமைப்படுத்தும் மையங்கள் இரண்டும் மற்றும் இனப்பெருக்க மையம் ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது. நோய் தாக்காத சினை இறால்களை உற்பத்தி செய்வது மற்றும் இறால்களை தனிமைப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

- பாரூரில் உள்ள திலேப்பியா ஆராய்ச்சி மையத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ.121.04 இலட்சம் செலவில் திலேப்பியா உற்பத்தி மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையத்தில் உள்ள குஞ்சு பொறிப்பகம் மூலம் திலேப்பியா மீன் குஞ்சுகள் மீன் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டத்திலுள்ள மீன் பண்ணையாளர்கள் திலேப்பியா மீன் வளர்ப்பை மேற்கொள்வதற்காக ஊக்குவிக்கப் படுகின்றனர்.

- தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இந்திய வேளாண் அறிவியல் கழகத்தின் சிறப்பு திட்டத்தின்கீழ், மீன் தர உறுதிப்பாடு மற்றும் மேலாண்மை துறையில், இறால் மற்றும் கணவாய்மீன்களிலுள்ள நுண்ணுயிர் இடர்பாடு மற்றும் இரசாயன படிவுகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பதப்படுத்தப்பட்ட சூரை இன மீன்களை, மரபு வழி குறியீடு முறையின் மூலம் கண்டறியும் மூலக்கூறு வகைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- தஞ்சாவூரில் உள்ள நன்னீர் சினை மீன் மேம்பாட்டு மையத்தில், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன், (ரூ.46.04 இலட்சம் செலவில்) 250 மீன் வளர்ப்போருக்கு நன்னீர் மீன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.
- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழுவின் "புதுமையான முன் முயற்சி திட்டத்தின்" (TANII) கீழ் "வண்ணமீன்–வானவில் தொழில்நுட்பப் பூங்கா"வினை (Aquatic Rainbow Technology Park) மாதவரம் வளாகத்தில் நிறுவுவதற்கு, ரூ.10.30 கோடி நிதியுதவி பெற்றுள்ளது. இம்மையத்தில், உயிர் உணவு உற்பத்தி, வண்ணமீன் இனப்பெருக்கம் மற்றும் நோய்

பரிசோதனை ஆகியவற்றில் அடிப்படை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன..

- மன்னார் வளைகுடா கடல் உயிர்க்கோள காப்பகத்தின் ரூ.10.05 இலட்சம் நிதியுதவியுடன், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மன்னார் வளைகுடா பகுதியில் மனித நடவடிக்கைகள் மற்றும் பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை உயிரின உற்பத்தி வகைகளில் ஏற்படும் தாக்கம் குறித்த ஆய்வுசெய்யப்படுகிறது.
- தேசிய அளவிலான மீன் மற்றும் இறால் நோய் கண்காணிப்பு திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் ஆறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளில், சுமார் 370 மீன் மற்றும் இறால் பண்ணையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இத்திட்டத்தின் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட மூன்று மாவட்டங்களிலும், அக்யூட் ஹெப்பட்டோ பன்கிரியட்டிக் நெக்ரோஸிஸ் நோய் (AHPND- Acute Hepatopancreatic Necrosis Disease) காணப்படவில்லை. என்ட்ரோசைட்டோசோவன் ஹெப்பட்டோபினேய் (EHP- *Enterocytozoon hepatopenaei* ) எனும் ஒட்டுண்ணி

நோய்க்காக மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பில் இம்மூன்று மாவட்டங்களிலும், இந்நோய் சுமார் **29.6** விழுக்காடு இருப்பதாக அறியப்பட்டுள்ளது. மேலும், இறால் பண்ணைகளில் பொதுவாக காணப்படும் இரு முக்கிய வைரஸ் நோய்களான வெண்புள்ளி நோய் (WSDV- White Spot Disease Virus), இன்பெக்ஸியஸ் ஹைப்போடெர்மல் ஹெமபொயிட்டிக் நெக்ரோஸிஸ் வைரஸ் (IHHNV- Infectious Hypodermal and Haematopoietic Necrosis Virus) ஆகியவைகளும் கண்டறியப்பட்டன.

**15.4. புரிந்துணர்வு ஒப்பந்தம் /வெளிநாட்டு நிறுவனங்களுடன் கூட்டுமுயற்சி**

தமிழ்நாடு மீன்வளப்பல்கலைக்கழகம், லாஸ் பால்மஸ் டி கிரேன் கேனேரியா பல்கலைக்கழகம், ஸ்பெயின், ஜேம்ஸ் குக் பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியா, கர்ட்டின் பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியா, சாங்காய் பெருங்கடல் பல்கலைக்கழகம், சீனா, இந்திய தொழில்நுட்ப நிலையம், கராக்பூர், கெண்ட் பல்கலைக்கழகம், பெல்ஜியம் போன்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கல்வி நிறுவனம் மற்றும் தனியார் மீன் பண்ணையாளர்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

## 15.5. உட்கட்டமைப்பு வசதிகள்

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2015–16ம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்ட மற்றும் திறந்து வைக்கப்பட்ட உட்கட்டமைப்பு விபரங்கள்

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், **2015–16**ஆம் ஆண்டில், ரூ. **51.30** கோடி மதிப்பிலான கீழ்க்காணும் கட்டடங்கள் அடிக்கல் நாட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டன.

**அட்டவணை:18**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 2015–16ம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்ட மற்றும் திறந்து வைக்கப்பட்ட உட்கட்டமைப்பு விபரங்கள்**

| வ. எண் | வளாகம் / உட்கட்டமைப்பு விபரம் | பரப்பளவு (ச.மீ) | நாள் | மதிப்பு ( ரூ. இலட்சம்) |
|---|---|---|---|---|
| **அடிக்கல் நாட்டப்பட்டவை** | | | | |
| **மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம்** | | | | |
| 1. | ‘தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டடம்’ | 5109 | 15.07.15 | 1102 |
| 2. | மீன்வளப் பொறியியல் கல்லூரி, ‘கல்வி குழும வளாகம்’ | 4988 | 13.11.15 | 1074 |
| 3. | கடல் சார்ந்த பொறியியல் பயிற்சிப்பட்டறை | 210 | 13.11.15 | 45 |
| **திறந்து வைக்கப்பட்டவை** | | | | |
| **மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி.** | | | | |
| 1. | கல்வி குழும வளாகம் | 5574 | 13.11.15 | 1200 |
| 2. | ஆசிரியர் மற்றும் நிர்வாக பணியாளருக்கான குடியிருப்பு கட்டடம் | 650 | 13.11.15 | 140 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | மகளிர் மற்றும் ஆண்களுக்கான தங்கும் விடுதிக்கட்டடம் | 1765 | 13.11.15 | 380 |
| 4. | தொழில் முனைவோருக்கான மீன்பதனக்கட்டடம் | 280 | 13.11.15 | 60 |
| 5. | கடல் வாழ் மீன் உணவக நிலையக் கட்டடம் | 140 | 13.11.15 | 30 |
| **மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி** | | | | |
| 1. | தொழிற்கல்வி சார்ந்த பயிற்சி நிலையம் | 454 | 13.11.15 | 97.65 |
| 2. | 'கடல் சார்ந்த பொறியியல் பயிற்சி பட்டறை' | 420 | 13.11.15 | 90.40 |
| 3. | கடல்வாழ் மீன் உணவக நிலையம் | 226 | 13.11.15 | 48.60 |
| 4. | திலேப்பியா ஆராய்ச்சிக் கூடம் | 210 | 15.07.15 | 45 |
| 5. | மீன் உணவு மற்றும் மீன் உணவக பரிசோதனைக் கட்டடம் | 120 | 15.07.15 | 25 |
| 6. | கடல் நீர் வள ஆய்வுக்கூடம் | 80 | 15.07.15 | 15 |
| 7. | மீன் தர மேலாண்மை தொழிற்கூடம் | 280 | 15.07.15 | 65 |
| **மீன்வளப் பல்கலைக்கழக வளாகம், மாதவரம்** | | | | |
| 1. | தொடர் நீர் சுழற்சி தொட்டி ஆய்வகம் | 260 | 15.07.15 | 56 |
| 2. | வண்ண மீன்குஞ்சு பொரிப்பகக் கட்டடம் | 830 | 15.07.15 | 50 |
| 3. | மீன்வளர்ப்பு மற்றும் உயிர் தொழில்நுட்ப ஆய்வகக் கட்டடம் | 80 | 15.07.15 | 15 |
| **இதர ஆராய்ச்சி நிலையங்கள்** | | | | |
| 1. | 'மண்டல மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நிலையம்' கிருஷ்ணகிரி | 540 | 15.07.15 | 121.04 |
| 2. | 'நோய் தாக்காத நாட்டு இன தாய் இறால் வங்கி மையம்' கன்னியாகுமரி | 910 | 15.07.15 | 198.91 |
| 3. | 'கடல் மீன் குஞ்சு பொரிப்பகம்' சாத்தன்கோன்வலசை கிராமம், மண்டபம் | 850 | 15.07.15 | 185.40 |
| 4. | 'கெண்டை மீன் பொரிப்பகம் மற்றும் அலங்கார மீன்வளர்ப்பு நிலையக்கட்டடங்கள்' | 233 | 15.07.15 | 50 |
| 5. | தொடர் நீர் சுழற்சி தொட்டி ஆய்வகம்' பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள வாணியன்சாவடி | 180 | 15.07.15 | 36 |
| | **மொத்தம்** | | | **5130** |

### 15.6. அறிவுரை வழங்குதல் / சான்றளித்தல் / கலந்தாலோசனை சேவைகள்

- இப்பல்கலைக்கழகம், கடல் உணவுப்பொருட்களுக்கு, தூத்துக்குடியிலுள்ள மீன் தர கண்காணிப்பு சான்றிதழ் மையத்தின் மூலமாக சான்றிதழ் அளித்து வருகின்றன.
- சென்னையிலுள்ள மாநில ஆய்வகம், தூத்துக்குடியிலுள்ள மண்டல ஆய்வகம் ஆகியவை மீன்களில் நோய் உண்டாக்கும் கிருமிகளை கண்டறியும் சோதனைக் கூடங்களாக செயல்பட்டு வருகிறது.

தூத்துக்குடியிலுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மீன் தர உறுதிப்பாடு மற்றும் மேலாண்மை துறையில் உள்ள மீன்தர கண்காணிப்பு மற்றும் சான்றளிக்கும் மையம் மற்றும் மாதவரம் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தில் அமைந்துள்ள நோய் சோதனையிடல் ஆய்வகம் ஆகியவை நீர், மீன், இறால் மற்றும் கடலுணவு மாதிரிகளின் தரத்தினை நிர்ணயிக்க சோதனைகள் மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் 2015 – 16ஆம் ஆண்டில் ரூ.71.17 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

### 15.7. விரிவாக்கச் செயல்பாடுகள்

இப்பல்கலைகழகமானது விரிவாக்கப் பணிகளையும், பண்ணை தொழில்களுக்கான பயிற்சிகளையும் அளித்து வருகின்றது. மீன்வள அறிவியலில் ஏற்பட்டுள்ள நவீன தகவல்கள் குறித்த விழிப்புணர்வை பண்ணையாளர்களிடையே ஏற்படுத்தும்

பொருட்டு கையேடுகள், பருவ இதழ்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றை அச்சிட்டு வெளியிடுகிறது. கிராம மக்களிடையே மீன் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்த தகவல் பரிமாற்றத்தினை மேற்கொள்ள, கண்காட்சி, மக்கள் தொடர்பு முகாம், வானொலி உரை, தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பு போன்றவற்றை தொடர் நடவடிக்கைகளாக மேற்கொண்டு வருகிறது. இப்பல்கலைக்கழகம், தொழில்நுட்பங்களை பரவலாக்கும் நோக்கோடு பல்வேறு பயிற்சிகளை, மீன்வளத்துறை, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் இதர அரசு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு மையங்கள் வாயிலாக, பல்வேறு மீன்வளர்ப்பு / தொழில்நுட்ப பயிற்சிகள் அளிக்கப்பட்டது. **2015–16** ஆம் ஆண்டில் **1,917** நபர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டதன் விவரம் அட்டவணை **19**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை.19**

**2015–16 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முக்கியமான பயிற்சிகள்**

| வ. எண். | கல்லூரிகள் / மையங்கள் | பயனாளர்களின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1. | மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | 400 | 431 | 831 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி | 108 | 107 | 215 |
| 3. | மீன்வளப் பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினம் | 80 | 149 | 229 |
| 4. | மீன்வளப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், பறக்கை | 95 | 259 | 354 |
| 5. | மீன்வளப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தஞ்சாவூர் | 145 | 53 | 198 |
| 6. | மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம், மாதவரம் | -- | 27 | 27 |
| 7. | திலேப்பியா ஆராய்ச்சி மையம், பாரூர் | 62 | 1 | 63 |
| | மொத்தம் | **890** | **1027** | **1917** |

- **17.07.2015** முதல் **20.07.2015** வரை "கொடிசியா" (CODISSIA) மைதானத்தில் நடத்தப்பட்ட அக்ரி இன்டெக்ஸ் (AGRI INTEX) கண்காட்சியில் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் சார்பில் கலந்து கொள்ளப்பட்டது.
- **21.09.2015** அன்று விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் சார்பில் வளங்குன்றா இறால் வளர்ப்பிற்கான பாத்தியதாரர்கள் ஆலோசனை கூட்டம் வேளாங்கண்ணியில் நடத்தப்பட்டது.

**எதிர்காலத் திட்டங்கள்**

- ஈரோடு மாவட்டம், பவானிசாகரிலுள்ள நன்னீர் மீன்வளர்ப்பு மையத்தில் 'ஜெயந்தி ரோகு' உற்பத்தி மையம் (Jayanthi Rohu Multiplication Centre) நிறுவுதல்.

**ஆராய்ச்சிக்கான முன்னுரிமை பகுதிகள்**

- அழியக்கூடிய மற்றும் வணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன்களின் பரவல் மற்றும் இருப்பை பாதுகாத்தல்
- மீன்களின் இனப்பெருக்க உட்சுரப்பியல் ஆய்வு செய்தல்
- மீன்களுக்கான ஊட்டச்சத்து தேவைகளை நிறைவேற்றுதல்
- திறந்த நீர் நிலைகளில் கூண்டுகளில் மீன்வளர்த்தல்
- உயிர்க்கூழ்ம தொழில் நுட்பத்தில் மீன் வளர்த்தல்
- நன்னீரில் வெனாமி இறால் வளர்த்தல்
- மீன் வளத்தில் நானோ தொழில்நுட்பம் புகுத்துதல்
- செப்புலி மற்றும் பாறை மீன் இனங்களின் குஞ்சு உற்பத்தி செய்தல்
- செயற்கை மீன் இரை மேம்படுத்துதல்
- ஆயிரங்கால் மீன்பிடி தூண்டில்களின் வடிவமைப்பை மேம்படுத்துதல்
- மீன் எண்ணெய் மாத்திரை உருவாக்குதல்
- நன்னீர் மீனினங்களில் மதிப்பூட்டிய பொருட்கள் தயாரித்தல்
- மீன்களில் நுண்ணுயிர் இடர்பாடு மற்றும் இரசாயன படிவுகளை ஆய்வு செய்தல்
- மீன்பொருட்களின் மரபுக் குறியீடுகளை உருவாக்குதல்
- மீன் கழிவுகளிலிருந்து பெப்டைடுகள் உருவாக்குதல்
- கடல் சார்ந்த ஊட்டச்சத்து மருந்துகளை உருவாக்குதல்
- மூலிகைகள் மற்றும் ஊட்டச்சத்து மருந்துகள் மூலம் மீன்களில் நோய் மேலாண்மை செய்தல்
- இந்தியப் பெருங்கெண்டைகளுடன், அயிரை மீன்கள் வளர்க்கும் தொழில்நுட்பத்தை உருவாக்குதல்

- மன்னார் வளைகுடாவின் மாசுக்கட்டுபாடு மற்றும் உற்பத்தி திறனை ஆராய்தல்
- மீன்கழிவுகள் மற்றும் கடல் பாசிகளின் மூலம் உயிரி எரிபொருள் தயாரித்தல்
- இறால் வளர்ப்பில் சிறந்த மேலாண்மை நடைமுறை மற்றும் உயிரி பாதுகாப்பை மேம்படுத்துதல்

## 16. 2016-17 ஆம் ஆண்டு மீன்வளத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீடு

2016-17 ஆம் ஆண்டிற்கு ரூ.**743.79** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.429.57 கோடி வருவாய் செலவினமாகவும் ரூ.**314**.22 கோடி மூலதன செலவினமாகவும் இருக்கும்.

## 17. நிறைவுரை

***"எனது தலைமையிலான அரசு செயல்படுத்தும் மேற்காணும் திட்டங்களின் மூலம் மீன் உற்பத்தி பெருகி, மீனவர்கள் நிறைவான பயன்களைப் பெற்று வாழ்வில் வளம் பெறுவர்"***

**– *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்***

சமீப காலங்களில் மீன்வள பிரிவானது பன்முகத்தன்மை கொண்ட முக்கிய துறையாக மாற்றமடைந்து வருகிறது. குறிப்பாக, ஆழ்கடல் மீன்வளத்தினை உபயோகித்தல், சுற்றுச்சூழலுக்கு உகந்த நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல்,

வண்ணமீன் வளர்த்தல், சுற்றுச்சூழல் மீன்வள சுற்றுலா, மீன்பதனிடும் பூங்காக்கள் நிறுவுதல், நடுக்கடலில் மீன்பதனிடும் அலகு நிறுவுதல் போன்றவைகளை உள்ளடக்கியதாகும்.

மீன்பிடி தொழில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், புரதச் சத்துள்ள உணவை வழங்குவதிலும், கணிசமான அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் முக்கியப் பங்கு வகித்தாலும், இந்தத் தொழிலை தங்களது வாழ்வாதாரமாக மேற்கொண்டு வரும் தமிழக மீனவர்கள் பல இன்னல்களை எதிர்கொண்டு வருகிறார்கள். மீனவர்களின் துயரினை உணர்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் மீன்பிடி தடைக்காலங்களில் வழங்கப்பட்டு வரும் தொகையினையும், மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் வழங்கப்பட்டு வரும் சிறப்பு நிவாரண உதவித் தொகையையும் ரூ.5,000/–ஆக உயர்த்தியுள்ளார்கள்.

பாக் வளைகுடா பகுதியில், நமது மீனவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்கு, நடைமுறைக்கேற்ற நிரந்தர தீர்வான, கச்சத்தீவினை இந்தியாவிற்கு மீளப்பெறவும் மற்றும் பாக் வளைகுடா பகுதியில் தொன்றுதொட்டு மீன்பிடித்து வரும் தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையினை நிலைநாட்டவும் இந்த அரசு உறுதியான நிலைப்பாட்டினை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மீனவர்களின் பாதுகாப்பிற்கு எப்பொழுதுமே உயர் முக்கியத்துவம் அளித்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தகவல் தொடர்பு வசதிகள் இல்லாத மீன்பிடிபடகுகளுக்கு மானிய விலையில் VHF ரேடியோ கருவிகள் வழங்கவும் மற்றும் கடலோர பகுதிகளில் தகவல் தொடர்பு கோபுரங்களை அமைத்து மீனவர்கள் ஆபத்து காலங்களில் கரையினை எளிதில் தொடர்பு கொள்ளத் தேவையான தகவல் தொடர்பு உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டின் மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை முனைப்புடன் மேம்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரசு, கடந்த ஐந்து ஆண்டுகளில், ரூ.1,104.91 கோடி நிதி ஒப்பளித்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், 35 மீன்இறங்குதளங்கள் மற்றும் 7 மீன்பிடி துறைமுகங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 14 இடங்களில் மீன் இறங்குதளங்கள் மற்றும் 3 மீன்பிடி துறைமுகங்கள் கட்டும் பணிகள் தமிழகத்தில் கடலோர பகுதிகளிலும், மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகள் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த அரசானது, மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் மீன்விற்பனை சந்தைகளில் குளிர்காப்பு வசதிகளுடன் சுகாதாரமான தரகுறியீடுகளின்படி நவீனப்படுத்துவதற்கு முனைப்புடன் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதிலும், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும், மீன் வளர்ப்போரின் வருமானத்தை அதிகரிக்கவும், கிராமப்புற இளைஞர்கள் மற்றும் மகளிருக்கு உள்நாட்டு மீன்வளத்தில் வேலை வாய்ப்பினை உருவாக்கி கிராமப் பொருளாதார வளர்ச்சியை உயர்த்திடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியினால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு முன்னோடி திட்டங்களால் மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தி வரும் காலங்களில் பன்மடங்கு அதிகரிக்கும். தமிழ்நாட்டின் மீன்வள மேம்பாட்டிற்கும், மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து பாடுபடும்.

**D.ஜெயக்குமார்**
**மீன்வளத்துறை அமைச்சர்**